[illegible]

പുസ്തകം 10 ലക്കം 4

Dec 1936

SL
m211,N27 SN
N36.10.4
186956

1064

REGD NO. M. 3460.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சைவமுந் தமிழுந் தழைத்தினி தோங்குக.



OFFICE OF THE
5-DEC
MADRAS

# சிவநேசன்

செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

ஆண்டு கo. ‖ பலவான்குடி தாது—கார்த்திகை ‖ திங்கள் ச.



| எண். | உள்ளுறை. | | பக்கம். |
|---|---|---|---|
| 1. | வாழ்த்தும் மதிப்புரையும் | ... | 69 |
| 2. | உவகை மொழிகள் | ... | 71 |
| 3. | ஜீவக்காருண்யச் செய்யுட்கள் | ... | ,, |
| 4. | மந்திரி அவர்கட்கு வரவேற்பு | ... | 72 |
| 5. | பாராட்டுப் பத்திரம் | ... | 74 |
| 6. | கனம் மந்திரியவர்களின் கண்ணியவுரை | ... | 77 |
| 7. | தீண்டாதார் ஆலயப் பிரவேசத் தடை | ... | 81 |
| 8. | ஆலய தரிசனம் | ... | 89 |
| 9. | கலியின் சுபாவமும் அதை நீக்கும் விதமும் | | 92 |
| 10. | ஒற்றுமை | ... | 93 |
| 11. | தனவணிக மாணவர்கட்குச் சன்மானம் | .... | 97 |
| 12. | மதிப்புரை மஞ்சரி | ... | 98 |
| 13. | சைவம் நாட்டிய தமிழ்த்தாய் | ... | 99 |



ஆசிரியர்:— ராம. த. ராம. இராமசாமி செட்டியார், பலவான்குடி.

# செய்தித்திரட்டு.

உள்ளூர்:— ஐப்பசி பிற்கூறிலும் கார்த்திகை முற்கூறிலும் நல்லமழைகள் பெய்து நீர்நிலைகள் நிரம்பி நெற்பயிர்கள் செழித்திருக்கின்றன.

பிள்ளையார் நோன்பு:— கார்த்திகை கசவ பிரதமை தொடங்கி உகஆம் நாள் ஆகிய மார்கழி ருவ சஷ்டியன்று கொண்டாடவேண்டியது; சதயமும் கூடுகிறது. மார்கழி ருவ தொடங்கி கஙவ இராத்திரி நடராஜாபிடேகமும் கசவ திருவாதிரைத் தெரிசனமும் ஆம்.

திருந்தென்குடித்திட்டை:— சித்தாந்தவித்தியாசாலையில், சந்தானாசாரியருளொருவராகிய ஸ்ரீமெய்கண்டதேவரின் குருபூசை வழக்கம்போல ஐப்பசி உஅவ சுவாதிநாளில் அன்புருவாகிய திருவாளர், அ. கணபதி பிள்ளையவர்கள் பொருளுதவியால் சிறப்பாக நடைபெற்றது. சிவாலயத்தில் ஸ்கந்த சஷ்டி ஐப்பசி உகவ பிரதமை தொடங்கி, கார்த்திகை சவ ஸ்கந்த சஷ்டியும் ருவ திருக்கல்யாணமும், சுவ விடாயாற்றியும், கார்த்திகைச் சோமவாரங்களும் கஉவ திருக்கார்த்திகையும் உபயக்காரர்களால் அபிஷேக நைவேதன ஆராதனைகளுடன் சிறப்பாகச் செய்யப்பெற்றன.

இராமநாதபுரம் ஜில்லா போர்டு தேர்தல்:— நவம்பர் 23உ எங்கு பார்த்தாலும் வெகு ஆர்ப்பாட்டமாகவே யிருந்தது. வேடிக்கை பார்க்க வந்தவர்களின் கூட்டமும் மிகுதியே. இயந்திரவூர்திகளில் பரபரப்பாக ஓட்டர்களை ஏற்றி வரவும் உணவாதியுபசரிக்கவும்பெற்றன. போட்டிகள் பலமாக விருந்தன. (ஒட்) தேர்தல்கள் நடைபெற்றன. பள்ளத்தூர் சாகத்தின் தேர்தல் மாத்திரம் இன்னும் நிறைவேறவில்லை. மற்றபடி நிறைவேறிய சாகங்களில் கல்லல் சாகத்திற்கு ஆ மு.கு.பழநியப்பசெட்டியார், காளையார்கோயில் சாகத்திற்குஅலவாக்கோட்டை பீ. நா. சொக்கலிங்கம் செட்டியார், குன்றக்குடி சாகத்திற்கு காரைக்குடி மு.ராம.சொ.பெரியணன்செட்டியார், சதுர்வேதமங்கலம்சாகத்திற்குஆ, தெற்கூர் கரு. முத்து. சிவலிங்கம் செட்டியார், திருப்புத்தூர் சாகத்திற்கு டாக்டர் சுப்பிரமணிய ஐயர்; ஜனாப் ச. பி. ந. மு. ராவுத்தர், தேவகோட்டை சாகத்திற்கு உ.ராம.உ.மு.சுப. இலக்குமணச்செட்டியார்,தொண்டி சாகத்திற்குதேவகோட்டை ஜமீன்தார் குமாரர் காளைராஜா செட்டியார், நெற்குப்பைச் சாகத்திற்கு கொத்தமங்கலம் சி. ராம. மு. ராம. முத்தைய செட்டியார், திருவாடானை சாகத்திற்கு கார்மேகத் தேவர், சிவகெங்கை சாகத்திற்கு சிவகெங்கை ராஜா; பி. நா. சொ. விசாலாக்ஷி அம்மாள், அருப்புக்கோட்டை சாகத்திற்கு பாளையம்பட்டி ஜமீந்தார், திருப்புவனம் சாகத்திற்கு சோழபுரம் சுப. க. இராமநாதன் செட்டியார் விருதுநகர் சாகத்திற்கு V. V. இராமசாமி, ஆகிய திருவாளர்கள் தேர்தலாகியிருக்கிறார்கள்.

தேவகோட்டை:— யுனைடெட் பாட்மிண்டன் கிளப்பில் நவம்பர்மாதம் 3-வது வாரத்தில் இருவர் பந்தாடிப் பரிசுபெறும் விளையாட்டு நடைபெற்றது. நகரத்தார்களின் ஸ்ரீமீனாட்சி வித்தியாசாலை தினக்கொண்டாட்டம் ஐப்பசி உகவ பிற்பகல் கனம் குமாரராஜா அவர்கள் தலைமையில் நடந்தது. மாணவர்களிருவரும் விஜயஞ் செய்திருந்தனர்

10

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சைவமுந் தமிழுந் தழைத்தினி தோங்குக.

# சிவநேசன்.

செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

பலவான்குடி.

| | | |
|---|---|---|
| ஆண்டு ൧ | தாது—கார்த்திகை 1936—டிசம்பர் | திங்கள் ச. |

உடையா னுன்ற னடுவிருக்கு முடையா ணடுவு ணீயிருத்தி
அடியே னடுவு ளிருவீரு மிருப்ப தானா லடியேனுன்
அடியார் நடுவு ளிருக்கும்அரு ளைப்புரி யாய்பொன் னம்பலத்தெம்
முடியா முதலே யென்கருத்து முடியும் வண்ணம் முன்னின்றே.

## "சிவநேசனுக்கு"

## வாழ்த்தும் மதிப்புரையும்.

(ஆலங்குடிவாழ் அந்தணாளரும் தமிழ்ப்பண்டிதருமாகிய உயர்திருவாளர், அ. கோபாலையரவர்கள்.)

சிவநேசம் பெறுமார்க்கம் பலவற்று ளிவ்விரண்டுஞ்
சிறப்புற் றோங்கும்
சிவநேசங் கொளுமுமையாள் பாகரவென் றவன்பேரே
செப்ப லொன்றாம்
சிவநேசந் தரும்புலவர் வரையுமுரை கொண்டுவரு
திங்கட் டாளாம்
சிவநேசன் வரவழைத்துப் படித்தறிதன் மற்றொன்றாஞ்
செப்புங் காலே.

அத்தகு திங்கட்டாளு மதனையங் கச்சியற்றிப்
புத்தகவடிவ மாக்கிப் புரந்தருள் வள்ளலான
வித்தக ராமசாமி விறற்றன வணிகன்றானும்
பத்தர்கட் கருளுமீசன் பரிந்தருள் தாக்கவாழி.

(மணவை திரு, குமாரகுரு அவர்கள்.)

சன்மார்க்க மன்பு சைவந் தமிழ்பக்தி
துன்மார்க்க ரும்பெற்றுச் சுகமெய்தக் கன்மப்
பவநாச மாற்றும் பலவான் குடியிற்
சிவநேசன் வாழ்கச் சிறந்து.

வாழ்க வைய மறைத்தமி ழுஞ்சைவம்
வாழ்க வைந்தெழுத் தக்கம ணிபூதி
வாழ்கத் தொண்டர் வளர்பல வான்குடி
வாழ்கத் திங்கள் வருசிவ நேசனே.

பொய்ச்சமய நிசிக்குவளைப் பூத்தாலும்
　　கதிரவன்முன் பொறையின்மிக்க
மெய்ச்சமயக் கமலமென விளங்கிமிக
　　மிளிர்ந்தாலும் மேன்மையாமோ
இச்சகத்திற் பத்திரிகை எத்துணைத்தோன்
　　றிடினுமுயிர்க் கினிமையாகாட்
பைச்சிரசுப் பணிகொள்சிவ நேசன்
　　பலவான்குடியிற் பகலோனேமே.

---

(கரிசூழ்ந்தமங்கலம், ஆனந்தகான சபையார்.)

சிவநேசன் பத்திராதிபரவர்கட்கு. தனவணிக குலத்துதித்து ஞானானுபவம் பெற்றுச் சீரியராய் அன்பும் அருளும் நிறைந்த சிவநேசச் செல்வ! கல்வி, அறிவு கவினுற விளங்க, சிவாகம மிகச் செழிப்புற்றோங்க, சிவபக்தர்களுக்குத் திவ்ய அமிழ்தினை யொப்பச் சிவநேசனைச் செகமெல்லாம் பரப்பி உண்மையாக நன்னீதிகளை யுணர்த்தி உயர்தனிச் சுவையை யூட்டி உருவும் கொள்கையும் மாறுதலின்றி உத்தமமார்க்கமாகிய ஒரே நோக்குடன், சிவநேசன் திங்கட்டாளை நடாத்தி வெற்றிபெற்றுவரும் நீங்கள் அரோக திடகாத்திரராய் நெடிதுவாழவும், பலகோடி நன்மைகள் புரிந்து பக்தகோடிகள் சிறப்புறும் வண்ணம் அயரா உழைப்புடன் சிவநேசனைப் பாங்காய் நடாத்தி மென்மேலும் வெற்றிபெற்று மிளிரவும் சச்சிதானந்தப் பரம்பொருளாகிய ஆனந்த தாண்டவ மூர்த்தியை மனமொழி மெய்களால் [illegible]

186456



(பலவான்குடி நகரத்தார், பிள்ளையார்கூடமென்னும் செங்கமலநாயகி திருவிழாக்கூடத்தில் ஆவணி ௩௰௨ கூட்டிய பேரவையின் தலைவர், சென்னை, மகாமகோபாத்தியாய, தாக்ஷிணாத்திய கலாநிதி, டாக்டர், உயர்திரு, உ. வே. சாமிநாதையரவர்கட்கு வழங்கிய

## உவகை மொழிகள்.

திருவிற் சிறந்து திகழ்தரு வளங்கள்
மருவிய கீர்த்தி வளருமா நகரம்
மானசீ ருத்தம தான புரத்துச்
செந்தழ லோம்பு மந்தணர் வருணஞ்
செய்தநற் றவப்பய னெய்திய தென்னத்
தோன்றிய பெரியோ யான்றநல் லறிவ
மன்னரும் போற்றித் தன்னிகர் தானெனு
மஹாமஹோ பாத்யாய மாபெரும் பட்டமும்
தகவுறும் டாக்டராந் தனிப்பெரும் பட்டமும்
கொடுத்திடப் பெற்றுயர் குணநிதி காஞ்சி
காமகோடி பீடம் கவின்பெறு சீலர்
தரப்பெறு தாக்ஷி ணாத்ய கலாநிதி
சாமிநாதப் பெயர்ச் சற்குண நிதியே
பண்டைத் தமிழ்நூல் பலவெளி வருதற்குக்
காரண மாகிய கவினுறு மணியே
பலவான் குடியெனும் பண்புறு நகரஞ்
சிறக்கவுப தேசஞ் செய்தமை யால்யாம்
உவகை கொண்டனம் உமைமண வாளன்
பேரரு ளால்நீ பெரிதுவா ழியவே.

## ஜீவகாருண்யச் செய்யுட்கள்.

(மணவை, திரு, குமாரகுரு அவர்கள்.)

தெய்வப்பெய ராலேபல சீவஇம்சை செய்து
பொய்வைப்பிட மாகும்பழி பூஜைதகல் வீரே
சைவப்பெய ராலேதமிழ் சமயம்உயர் வாகக்
கைவைத்திடும் நெல்லிக்கனி காணீருல கீரே.

நாடும்பொருள் உயர்நாயகன் நலஞ்செய்திடு முறையில்
ஆடும்பல கோழியுரு ஆனென்என அறைவீர்
தேடும்பொருள் கொல்லாமையித் தேசம்பர விடவே
யீடுமிதற் குண்டோசொல எண்ணித்துணி வீரே.

எல்லாவுயி ருடலுந்திரு மீசன்இட மென்பீர்
கொல்லாவிர தம்பூமிசை கொண்டோர் குறித்துள்ள
நல்லார்எனப் பெயர்கொண்டவர் ஞாயமறி வார்எல்
கல்லாதவர் என்செய்குவர் கருணையி[illegible]ரே.

உ

# மந்திரி கனம் குமாரராஜா அவர்கட்கு வரவேற்பு.

உலகில் மிகப்பிரசித்திபெற்ளெரிரும் கனம் செட்டிநாட்டு ராஜா அவர்களின் முதற்புத்திரர் குமாரராஜா, கனம் முத்தையசெட்டியாரவர்கள் சென்னை அரசாங்கத்தாரால் கல்வி இலாகா மந்திரியாராக நியமனம்பெற்றது யாவர்க்கும்பெருமகிழ்ச்சியைவிளைத்திருக்கிறது. கனம்மந்திரியார்சென்னையிலிருந்துமயிலேறி ஐப்பசி உய௨ முற்பகல்செட்டிநாடுவந்துசேர்ந்தனர். தனவணிக நகரத்தார்களும் பிறரும் பலவூர்களிலிருந்து வந்து வரவேற்று ஊர்வலமாக அவர்களின் அரண்மனைக்கு அழைத்துவரப்பெற்றார்கள். பிற்பகலில் கானாடுகாத்தான் நகரத்தார்களும், நகரபரிபாலன சபையாரும் வரவேற்று உபசரித்தார்கள். திருவாளர், வெ. வீர. நா. மு. சுப்பையசெட்டியாரவர்களும், நேமத்தான்பட்டி திருவாளர், மு. பெ. அண்ணாமலைசெட்டியாரவர்களும் உவகைப் பத்திரங்கள் வழங்கினர். 'சிவநேசன்' இராமசாமி செட்டியார் பாராட்டிப் பேசினர். அனைவர்க்கும் திருவாளர், க. வெ. சித. வேங்கடாசலச் செட்டியாரவர்கள் வந்தனம் கூறினர்.

மாஜி கவர்னர்களான சர், முகமது உஸ்மான் சாகிப் அவர்களும், சர், K. V. ரெட்டி நாயுடு (லாமெம்பர்) அவர்களும் உகஉ காலை செட்டிநாடு வந்து அரசமாளிகைக்கு அழைத்துவந்துபசரிக்கப்பெற்றனர். அங்கிருந்து மூவரையும் பள்ளத்தூருக்கு வரவேற்று அருணாசலச் செட்டியார் ஹைஸ்கூலில் ராவ்பஹதூர் திருவாளர், அருணாசலச் செட்டியாரவர்களால் வரவேற்புப்பத்திரங்கள் வழங்கவும் யூனியன் கிளப்பிலும் திவான்பஹதூர் அ. மு. மு. முருகப்பசெட்டியாரவர்கள்மாளிகையிலும் உபசாரங்கள் செய்பவும்பெற்றன. யூனியன் கிளப்பில் திருவாளர் வீ. முரு. வீ. வீரப்ப செட்டியாரவர்களால் உபசாரப்பத்திரம் வாசித்தளிக்கப்பெற்றது.

அங்கிருந்து காரைக்குடிக்கு வரவேற்று நகரபரிபாலனசபையின் தலைவர், திருவாளர், மெ. செ. மெ. மெ. மெய்யப்ப செட்டியாரவர்களால் உபசாரப்பத்திரம் வழங்கவும் ஸ்ரீ வேணுகோபாலசுவாமி கோயிலில் கோயில் மரியாதைகள் வழங்கவும் பெற்று ஸ்ரீராமவிலாஸ படக்காட்சிசாலையில் தொண்ணூற்றாறூர் நகரத்தார்களால் சிறப்பாக வரவேற்று உபசாரப் பத்திரங்களும் பாராட்டுரைகளும் வழங்கப்பெற்று விருந்துபசரிக்கப்பெற்றனர். ராஜமரியாதைகளுடன் வரவேற்பு நிகழ்ந்தது. ஆத்தன்குடி ராம. கா. அரு. அருணாசலச் செட்டியார், கீழச்சிவல்பட்டி அள. அ. முருகப்ப செட்டியார் ஆகிய திருவாளர்களால் மாலைகள் சூட்டி வரவேற்கப்பெற்றன.

மாஜி கவர்னரிருவரும் மந்திரியாரும் சேதுபதியவர்களும் மேடைமீதமர்ந்திருந்தனர். மாலைகள் சூட்டி மரியாதைகள் செய்யப்பெற்றன.

நகரத்தாரின்சார்பாக சர், உஸ்மான் சாகிப் அவர்களைத்தலைமை வகிக்கும்படி திவான்பகதூர் அ. மு. மு. முருகப்பசெட்டியாரவர்கள் கேட்டுக்கொண்டார்கள். திருவாளர், நா. கு. இராமநாதச்செட்டியாரவர்கள் ஆமோதித்தார்கள். உஸ்மான்சாகிப்அவர்கட்கு திருவாளர், மெ. செ. ச. சிதம்பரம் செட்டியாரவர்கள் உபசாரப்பத்திரம்படித்தும்தேவகோட்டை ஜமீந்தார், திருவாளர், அள. அரு. ராம. வெள்ளையன் செட்டியாரவர்கள் மாலை சூட்டி உபசாரப்பத்திரத்தை வெள்ளிப்பேழையில் வைத்தும் வழங்கினர். கனம் மந்திரியார்க்குதேவகோட்டை திருவாளர், அள. சுப. பழ. சுப்பிரமணியன் செட்டியாரவர்கள் உபசாரப்பத்திரம்படித்தும் கீழப்பூங்குடி திருவாளர், கூ. அரு. க. சுப்பிரமணியன் செட்டியாரவர்கள் மாலை சூட்டி உபசாரப்பத்திரத்தை வெள்ளிப்பேழையுள் வைத்தும் வழங்கினர்.



சர், உஸ்மான் சாகிப் அவர்கள் தகுந்த உத்தரம் கூறினர்.

மகா-ா-ா-ஸ்ரீ ராமநாதபுரம் மகாராஜா கனம் சேதுபதியவர்களும், குமரன் ஆசிரியர் சொ. முருகப்பா, புதுக்கோட்டை வக்கீல் ராயவரம் V. சண்முகம்செட்டியார், பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார் ஆகிய திருவாளர்களும் பாராட்டிப் பேசினர். கனம் மந்திரியாரவர்களுக்கு தொண்ணூற்றாறூர் நகரத்தார் வழங்கிய பாராட்டுப் பத்திரமும் கனம் மந்திரியாரின் கண்ணியவுரையும் இதன் தொடர்ச்சியாகச் சேர்க்கப்பெற்றுள்ளன. நம்மைமுன்னுக்குகொண்டுவந்த பழங்கொள்கைகளைக் கைநழுவவிடப்படாதென்றும் கடவுள் நம்பிக்கையுடனும் கனம் மந்திரியாரவர்கள் பேசியதுகொண்டு அவர்கள் நன்றியறிதலுள்ளவர்கள் என்பதும், என்றும் நல்வாழ்வுறும் இயல்புடையவர்கள் என்பதும் தெளிவாம்.

பலரிடமிருந்து வந்த வாழ்த்துச் செய்திகளை கொத்தமங்கலம் திருவாளர், சி. அ. சி. காசிநாதன் செட்டியாரவர்கள் வாசித்தார்கள். அனைவர்க்கும் தேவகோட்டை ஜமீன்தார் குமாரர் திருவாளர், சோமநாதன் செட்டியாரவர்களால் வந்தனோபசாரங் கூறப்பெற்றது. பின்னர் உயரிய முறையில் சிற்றுண்டியுடன் தேனீர் விருந்து செய்யப்பெற்றது. ராமவிலாச படக்காட்சிசாலையின் உரிமையாளர்களாகிய திருவாளர்கள், க. தெ. க. அள. அழகப்ப செட்டியார் உ. அ. அரு. அருணாசலச் செட்டியார் ஆகிய இருவருக்கும் வைரமணிகள் வைத்திழைத்த இருபதக்கங்கள் நகரத்தார் சார்பாக கனம் குமாரராஜா அவர்களால் தனித்தனியாக வழங்கப்பெற்றன. அடைமழைபெய்த சந்தர்ப்பத்திலும் இடைவிடாதுழைத்து இம்மாபெருங் கூட்டத்தை மாண்புடன் நடாத்திய கமிட்டியாரின் பேரூக்கம் பெரிதும் போற்றற்குரியதே.

மாஜி கவர்னர்களையும் மந்திரியாரையும் காரைக்குடி கார்ப்பொரேஷனுக்கு அதன் மானேஜிங் டைரக்டர் திருவாளர், மெ. செ. ச. சிதம்பரம் செட்டியாரவர்கள் வரவேற்றும், திருவாளர், மு. ராம. பெரியணன் செட்டியாரவர்கள்மனையில் நல்விருந்தருத்தியும் உகஉ காலை நகரபரிபாலன சபைத் தலைவர் செஞ்சை மாளிகையில் சிற்றுண்டியருத்தியும் ஸ்ரீ மீனாட்சி பெண்பாடசாலைக்கு வரவேற்று வரவேற்புப்பத்திரங்கள் வழங்கியும் ஸ்ரீ மீனாட்சிசுந்தரேஸ்வரர் ஹைஸ்கூலுக்கு திருவாளர், ஆவி. பழ. சித. இராமநாதன் செட்டியாரவர்களும் தலைமையாசிரியரும் வரவேற்று, திருவாளர்களான, மெ. செ. ச. சிதம்பரம் செட்டியார் ஆவி. ப. மு. ராம. முருகப்பசெட்டியார் ஆகியவர்களால் மாலையணிவித்தும் உபசரித்தார்கள்.

தேவகோட்டை திருவாளர், உ. ராம. உ. மு. சுப. இலக்குமணச் செட்டியாரவர்கள் மாளிகைக்கு வரவேற்று சிற்றுண்டி விருந்தும் சங்கீதக் கச்சேரியும், ஜமீந்தாரவர்களால் வரவேற்று தோட்டக்கச்சேரியும் தேநீர் விருந்தும் செய்து உபசரித்தனுப்பப்பெற்றார்கள்.

கானாடுகாத்தான், பள்ளத்தூர், காரைக்குடி, தேவகோட்டைமுதலான ஊர்களில் விருந்தினர்களை வரவேற்ற இடங்களிலும்வழிகளிலும் பேரலங்காரங்களும்தோரணங்களும் பிறங்கின. பலஊர்களிலுமுள்ளபிரமுகர்களும் தனவணிக நகரத்தார்களும், நீதிபதிகளும் வழக்கறிஞர்களும் பலவேறு உத்தியோகஸ்தர்களும் நிறைநிறையாக வந்து குழுமியிருந்தனர். கல்லூரிகளிலிருந்து மாணவர்களும் ஆசிரியர்களும் வந்திருந்து வாழ்த்துக்கூறினர். மங்கல வாத்தியங்கள் முழங்கின. எங்கும் குதூகலமாகவே வரவேற்புக் கொண்டாட்டங்கள் நடைபெற்றன.

உ

சிவமயம்.

சென்னை அரசாங்கத்துக் கல்வி மந்திரி, கனம் செட்டி நாட்டுக் குமார ராஜா முத்தைய செட்டியாரவர்களுக்கு நாட்டுக்கோட்டை நகரத்துத் தனவைசியர் அளித்த

# பாராட்டுப் பத்திரம்.

மாண்புமிக்க ஐயா,

தங்களுக்கு வாழ்வும் பிறநலங்களும் சிறப்பனவாக.

பொருள் புகழ் புண்ணியம் என்னும் இவற்றாற் சிறந்து விளங்கும் நம் தனவைசியப் பெருங்குடியில் ஒப்பிலாப் பெருங்கொடையால் உயர்குணத்தாற் கீர்த்தியினால் எய்ப்பிலாத் திறமையினால் எவரினுஞ் சிறந்து விளங்கும் கனம் செட்டிநாட்டு ராஜா ஸர் அண்ணாமலை வள்ளலாரின் அருந்தவப் புதல்வராகத் தோன்றி, விளையும் பயிர் முளையிலே தெரியும் என்றபடி இளம் பருவத்தே கல்விப் பயிற்சியில் முற்பட்டு ஓங்கிய சிறப்புடை ஆங்கிலமொழியில் B. A. பட்டம் பெற்றுத் தாய்மொழியாகிய தமிழ் நலமும் உணர்ந்து அறிவு வளர்ச்சியிற் சிறப்புற்றதோடு அன்பு, தயை, இன்சொல், பணிவு முதலிய உயர்குணங்களும் நிரம்பப்பெற்று, மகனறிவு தந்தையறிவு என்பதற்கு இலக்காகவிளங்குந்தங்கள் பெருமையைப் பெரிதும் பாராட்டுகின்றோம்.

அருங்குண மதிவலி யொருங்குறும் அண்ணல்!

தங்கள் அறிவுங் குணங்களும் எவ்வளவு சிறப்புடையனவாக விளங்குகின்றனவோ அவ்வளவினும் சிறப்பத் தெரிந்து வினைசெய்யுந் திறலும், நிருவாக ஆற்றலும், வாணிகத்தொழிலில் நிகரற்ற வன்மையும், ஜனசமுதாய இயக்கங்களில் தலைமை பெறுந்தகுதியும் தங்கள்பால் நன்கு அமைந்துள்ளவென்பதற்கு யாங்கள் கண்ட சான்றுகள் பலவாகும். அவை முழுதும் குறிப்பிட இச்சிறு பத்திரம் இடந்தாராதாகலின் ஒரு சிறிது எடுத்துரைக்க விரும்புகின்றோம்.

சென்னைச் சட்டசபையில் பல்லாண்டு உறுப்பினராக இருந்து அரசாங்கத்துக்கும் குடிமக்களுக்கும் வேண்டுவனசெய்து வருகின்றீர்கள். தென்னிந்திய நல உரிமைச் சங்க நிர்வாகக் கமிட்டித் தலைவராகவும், நம் நாட்டுப் பொருளாதாரக்குறைக்குக் காரணம்



ஆராயுங் கழகத்து உறுப்பினராகவும், இம்பீரியல் பாங்கின் சென்னை மாகாண நிருவாகராகவும், இந்தியன் பாங்கில் பல ஆண்டு உறுப்பினராகவும், தருமங்கள் பலவற்றால் இறந்தும் இறவாமல் புகழ்பெற்று விளங்கும் பச்சையப்ப முதலியாரின் தருமஸ்தாபன அங்கத்தினராகவும், சென்னைமாகாண பாங்கிங் விசாரணைக் கமிட்டி அங்கத்தினராகவும், சென்னை மாகாண ஓட்டுரிமைக் கமிட்டியின் அங்கத்தினராகவும், இன்னும் பற்பல தொழிற்சாலைகளுக்கும் வர்த்தக சங்கங்களுக்கும் நிருவாகராகவும் இருந்து திறம்பெற நடாத்தி வந்திருக்கின்றீர்கள். பர்மா முதலிய வெளிநாடுகளுக்குச் சென்று ஆங்குள்ள வாணிகமுறைகளையும் ஆராய்ந்தறிந்துள்ளீர்கள். சென்னைமாநகரத்து முதன் மேயராகப்பெற்ற பெருமையும் அதனை ஒரு முறையன்றி இருமுறையும் பெற்று நகரத்தை அலங்கரித்த மாண்பும் தங்களுக்கே யுரியவையன்றோ.

தலைமையும் தகுதியும் நிலவிய குரிசில்!

இத்தகைய பல துறைகளிற் சிறந்த அனுபவமும் நிருவாகத் திறமையும் தங்கள்பால் நன்கு அமைந்திருப்பதன் பயனாகவே இப்பொழுது சென்னை அரசாங்கத்துக் கல்வி மந்திரியாக நியமனம் பெற்றீர்கள் என்பதை யறிந்து அளவிலாப் பெருமகிழ்ச்சி யடைகின்றோம். தங்களாலும் தங்கள் தந்தையாராலும் நம்மரபினர் அடைந்துவரும் பெருமைகளுள் இது முக்கியமாக நினைக்கத்தக்கதென்பதை யாவரேயறியார். தந்தையார் அரசராக அரசகுமாரராக விளங்கும் தாங்கள் சிறந்தஅரசாங்கத்துஅமைச்சராக அமைந்த பெருமை எங்கள் உள்ளத்தை மிகவும் இன்புறுத்துகின்றது.

சிறந்த தருமமாக அண்ணாமலைப்பல்கலைக்கழகத்தைநிறுவி அதன் புரோசான்ஸலராக இருந்து தமிழ்நிலத்தார்க்குப் பேருதவி புரிந்து வரும் தங்கள் அரும்பெறல் தந்தையாரையொப்பவே தாங்களும் அக்கலை வளர்ச்சியில் ஈடுபட்டு வேண்டுவன செய்து வருதற்கியையச் சென்னைப் பல்கலைக் கழகத்துப் புரோசான்ஸலராவதற்குரிய கல்வி மந்திரியாக அமைந்தீர்கள். சென்னைப் பல்கலைக் கழகம் தந்தை நிலையிலும் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் மகவு நிலையிலும் வைத்தெண்ணப்படுங்கால், மகவாங்கழகத்துக்குத் தங்கள் தந்தையார் புரோசான்ஸலராக தந்தையாங்கழகத்துக்கு மைந்தராகிய

தாங்கள் புரோசான்ஸலராக அமைந்தது பாராட்டத்தக்கதே. இத்தொடர்பை நினையுங்கால் தாங்கள் தந்தைக்கு இயைந்த மைந்தரென்பது நன்கு விளங்கும்.

*அரும்பெறற் கல்வியின் அமைச்சரேறே.*

பெருங்கொடைவள்ளலாகிய தங்கள் தவத்தந்தையாரின் செயற்கரும் செயல்களாலும், தங்களுக்கு இயற்கையின் அமைந்துள்ள கல்வி, அறிவு, நிருவாகத்திறமை, நற்குணங்கள் முதலிய மேம்பாடுகளால் தாங்கள் மிக்க இளம்பருவத்தே அடைந்த கல்வி மந்திரியாகிய இப்பெரும் பதவியாலும் தங்கள் மரபினேமாகிய யாங்கள் நம்மரபையுயர்த்தக்கிடைத்த பெரும்பேறுகளை நினைந்து உளமகிழ்ந்து பாராட்டுகின்றோம். தாங்கள் ஏற்ற இப்பதவி உடனலம்பேணும் ஆரோக்கியத்தையும், உயிர்நலம்பேணும் கல்வியையும் பரிபாலித்தற்குரியதாகலின், இதன் பயனாக நம்நாடு வறுமையும் பிணியும் ஒழிந்து செழிப்புற்றுவாழவும், வாணிகத்துறை வளம்பெற்றுப் பொருளாதாரநிலை வளர்ச்சியடையவும், எல்லா மக்களுங் கலைக்கண்ணைப்பெற்று அறிவு விளக்கம் பெறவும், தமிழன்னை தனக்கு நேரும் இடையூறுகளை யொழித்துத் தன் இயல்நலம் விளக்கமுறத்திகழவும், பலதிறத்து மக்களும் ஒற்றுமை பெற்று அன்புடையராய் வாழவும் வேண்டுவன செய்வீர்களென்று நம்புகிறோம்.

*பிறர்நலம்பேணும் பெருந்தகையீர்!*

தில்லைக்கூத்தன் திருவருட் பாங்காலும் நித்தியகலியாணி சமேத கைலாயநாதர் திருவருளாலும் தங்களுக்கு வாழ்நாள் சிறப்பதாக; அறிவும் திருவும் பரோபகார சீலமும் புகழும் மேன்மேல் வளர்ந்து ஓங்குவனவாக; உங்கள் மரபு எல்லா நலங்களும் நிரம்பப் பெற்று வாழையடிவாழையாகச் செழிப்புறுவதாக என்று உளமார வாழ்த்துகின்றோம்.

காரைக்குடி,
5—11—1936

இங்ஙனம்:
தங்கள்பால் மதிப்பும் அன்பும்மிக்க,
நாட்டுக்கோட்டை நகரத்தார்.

ட

## கனம் மந்திரியவர்களின் கன்னியவுரை.

மேன்மை தங்கிய நகரத்தாரவர்களே! கனம் சபைத்தலைவர் அவர்களே! பெரியோர்களே!

நாம் தற்கால நாகரீகத்திற்கு ஏற்றபடி நம்முடைய நடையுடை பாவனைகளை மாற்றிக்கொண்டாலும் நமது மரபிற்கே சிறப்பாகவுள்ள நன்மைகளை மட்டும் விட்டுவிடலாகாது. பற்பல காரணங்களினால் சில வருஷ காலமாக நமது வருவாயும் முதலும் குறைந்துவிட்டது. மனத்தளர்ச்சியடையாது நமது தொழில்முறையில் அதிக ஊக்கம் செலுத்தி நமது பண நிலையை விருத்தி செய்யவேணும். செல்வம் குறைந்தால் மற்றதெல்லாம் குறையுமென்பதை நான் சொல்ல நீங்கள் தெரிந்துகொள்ளவேணுமென்பதில்லை. எனது சகோதரர்களாகிய நீங்கள் நம் சமூகத்து இளைஞர்கள் நம் தொழில் முறையில் காட்டும் ஊக்கமும் விடாமுயற்சியுந்தான் நமது சமூகத்தின் செல்வப்பெருக்கிற்குக் காரணமாக விருக்குமென நான் சொல்லுவதைப் பொதுவாக நம் சமூகத்தாரும் முக்கியமாக நமது சமூக இளைஞர்களும் அங்கீகரிப்பார்களென்று நம்புகிறேன். மிகவும் பழமையான நமது தொழில் முறைகளையும் கணக்கு முறைகளையும் நாம் தள்ளலாகாது. நம்மை உயர்நிலைக்குக்கொண்டுவந்த பழய கொள்கைகளை நழுவவிடப்படாது. திரைகடலோடியும் திரவியம் தேடுவது நமது வழக்கம். அதையும் நமது வியாபார முறைகளையும் கைவிடக்கூடாது. இன்னும் பயன் தரக்கூடிய புதிய தொழில் முறைகளையும் கவனிக்கவேண்டும். நாம் நமக்கு இயற்கையாகவுள்ள பக்தியும் தர்ம சிந்தனையும், ஆளுவோரிடத்தில் பக்தியும் குறையாது வளர்க்கவேண்டும்.

முக்கியமாய் நாம் கல்வித்துறையில் முன்னேற்றமடையவேண்டும். 10, 15, வருஷங்களுக்குமுன் இருந்ததைவிட இப்போது நாம் கல்வியில் மேம்பாடடைந்திருக்கிறோம். உயர்தரக் கல்வி நம்மவர்களுக்கு இன்னும் வளரவேண்டும். எல்லாரோடும் சமானமானவர்களாய் நாம் எண்ணப்படவேண்டுமானால் கல்வியில் நாம் சிறப்படையவேண்டும். கல்வியை நமது மரபில் சிறுவர்களும், சிறுமிகளும் கண்ணுங் கருத்துமாய்க் கற்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன். அரிய பெரிய தருமங்களைச் செய்யும் வல்லமையுள்ள நகரத்தார்களுக்கு நமது சமூகத்துச் சிறுவர்களும், சிறுமிகளும் கல்வி அபிவிருத்தி அடைவதற்கு வேண்டிய வசதிகளைச் செய்வது பெரிய காரியமல்ல. ஆதலால் நமது குலப்பெரியோர்கள் இந்த வசதிகளை யெல்லாம் மேன்மேலும் செய்துதரும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்.

நாம் காலத்திற்கு ஏற்க அரசியல் துறையிலும் இப்போது கவனத்தை செலுத்தவேண்டியவர்களாயிருக்கிறோம். அரசியல் துறைகளில்தான் தற்

காலத்தில் சிறப்பும், மற்றவர்களுக்கும் உதவியாகவிருக்கும் பெருமையும் பெற இடமுண்டு. பொருளாதார விஷயங்களும், தொழில்முறை விஷயங்களும், அரசியல்விஷயங்களும் ஒன்றொடொன்று சம்பந்தப்பட்டு இருக்கின்றன. ஆகையால் இக்காலத்தில் தொழில்முறைப்பாதுகாப்புக்காக அரசியல் துறையில் சிறிதேனும் ஈடுபடவேண்டியது அவசியமாகயிருக்கிறது. சில மாதங்களுக்குள் புதியஅரசியல்முறைத்திட்டம் ஆரம்பிக்கப்படும். அது முற்றிலும் நமக்குத் திருப்திதரக்கூடியதாக இல்லாவிட்டாலும் இப்போது இருந்துவருகிற திட்டத்தைவிடப் பலவகையில் சீர்திருத்தமுடையதாக இருக்கிறது. ஆதலால் அதை மேற்கொண்டுநடத்தவேண்டியது நம்சமூகத்தாருக்கு ஏற்றதாகும்.

இன்றையத் தினம் நடந்தேறிய வைபவத்திற்கு ஒரு பெரிய சிறப்பு ஏற்பட்டதாக நான் மதிக்கிறேன். இந்தியர்களுக்குக் கிடைப்பதற்கரிய கவர்னர்ப்பதவியைப்பெற்றசர்,மகமத்உஸ்மான்சாகிப்அவர்களும்,ஆனரபிள், சர், கூர்மா வெங்கடரெட்டி நாயுடு அவர்களும் இன்று இந்த சபையில் விஜயம் செய்து நம் சமூகத்தாரையும், உங்களிலொருவனான என்னையும் கௌரவப்படுத்தியதற்காக உங்கள் சார்பாகவும் என் சார்பாகவும் நமது வந்தனத்தை நான் அவர்களுக்கு தெரியப்படுத்திக்கொள்ளுகிறேன். சபைத்தலைவராகிய ஸர் மகமத் உஸ்மான் சாகிப் அவர்கள் எனக்கு எப்பொழுதும் அன்புடன் உற்சாகம் அளித்தும், உதவி புரிந்தும் வந்திருக்கிறவர்களாகையால் அவர்கள் இந்த வைபவத்தில் தலைமை வகித்தது எனக்குப் பெரிய மகிழ்ச்சியைத் தருகிறது.

தாங்கள் எனக்கு மிகுந்தஅன்புடன் அளித்த இந்த வரவேற்புக்காகத் தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவிக்கின்றேன். தாங்கள் என் தந்தையாரைப்பற்றியும் என்னைப்பற்றியும் அதிகமாய்ப் புகழ்ந்து கூறியிருக்கின்றீர்கள். அவைகளுக்கெல்லாம் மிகுந்த தயாளமுடைய நீங்கள் எங்களிடம் வைத்த பேரன்புதான் காரணமென்று நம்புகிறேன். என்னைப் பெருமைப்படுத்தும் பொருட்டு அந்த உபசாரங்கள் செய்து பற்பல உயர் குணங்களை என்மேல் ஏற்றிப் பலவகையிலும் என்னை கௌரவப்படுத்திய தங்களுக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். என்னிடம் அந்தக் குணங்களெல்லாம் இருக்கவேண்டுமென்று தாங்கள் விரும்புவதாக எண்ணுவேனே யல்லாமல் என்னிடம் அவைகள் இருப்பதைக்கண்டு தாங்கள் சொன்னதாக நான் எண்ணமாட்டேன். என்னிடம் ஏதாவது சிறிதளவு நற்குணங்கள் காணப்பட்டாலும் அவைகளுக்கு எல்லாம் நமது சமூகத்தின் பெரியோர்களாகிய உங்கள் ஆசீர்வாதமே காரணமாகுமென்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். மேலும் என் தந்தையாரும் நானும்



பொதுஜனத்தொண்டு எனக்கருதிச் செய்திருக்கும் சிலசில காரியங்களுக்கு ஸ்ரீமான்களாகிய உங்களின் சகாயமே உற்சாகத்தை அளித்து அவைகளைச் செய்ய எங்களைத் தூண்டியது என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். கல்வி கேள்விகளில் சிறந்த பெரியோர்கள் உள்ள இந்த சபையில் அதிகம் பேசுவதற்கு எனக்கு மனந் துணியாவிட்டாலும் பாராட்டுப் பத்திரத்தில் கூறியவைகளுக்கு நான் பதில் சொல்லுவது என் கடமையாகவிருக்கிறது. ஆகையால் நான் சொல்லும் வார்த்தைகள் மிகையாகத் தோன்றினும் அதை மன்னிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

நான் பலசங்கங்களில் அங்கத்தினனாகவும், தலைவனாகவும், சென்னை நகர சபை மேயராகவும், பல பாங்கிகளில் நிர்வாக அங்கத்தினனாகவும் இருந்து நமது மரபினர்க்கும் மற்றவர்களுக்கும்தொண்டு செய்ததாகப்புகழ்ந்திருக்கிறீர்கள். நான் செய்த தொண்டு மிகவும் சொற்பமானது. தினையளவாக நன்மை செய்தால் அதைப் பனையளவாகப் பாராட்டுவது பெரியோர்கள் இயல்பு. அதேபோல் தாராளமான மனதுடைய நகரத்தார்களுக்கு என்னிடமுள்ள பிரியமே இப்படி என் தொண்டைப்பாராட்டினதற்குக்காரணமென்று நினைக்கிறேன். பெரும் பொருள் செலவிட்டுத் தேச மக்களின் நன்மையை நாடி பல தருமங்களை நடத்திவரும் நகரத்தார்கள் அம்மரபினில் சேர்ந்தவனாகிய என்னைப் பாராட்டி இந்த வைபவத்தை மிகச் சிறப்பாக நடத்துவது அவர்களுடைய பெருந்தகைமைக்குப்பொருந்தியதாகும். தங்களுடைய பேரன்பும் ஆசியும் எனக்கு நிலைத்திருக்க வேண்டுமென்று பிரார்த்திக்கிறேன்.

நான் கல்வி மந்திரியாக நியமிக்கப்பட்டதைப் பற்றி தாங்கள் சொல்லிய புகழ்ச் சொற்களெல்லாம் தங்களுக்கு என்னிடமுள்ள பேரன்பைக் காட்டுகிறது. புரோசான்ஸலர் ஸ்தானத்தைப் பற்றியும், கல்வி முதலிய தமிழ் மொழி வளர்ச்சியைப்பற்றியும் தாங்கள் சொல்லியவைகளையெல்லாம் மனத்துட்கொண்டேன். தமிழ்மொழிவளர்ச்சியில் நமது சமூகம் ஈடுபட்டிருக்கிறதுஎன்பதற்குச் செட்டிநாட்டில் பற்பலவிடங்களில் அமைக்கப்பெற்றிருக்கும் தமிழ்க்கலாசாலைகளும், அண்ணாமலைப்பல்கலைக்கழகமுமே போதுமான சாக்ஷியாகும். நான் மந்திரியாகவிருக்கும் கால அளவுக்குள் கூடியவைகளையெல்லாம் செவ்வனே செய்ய முயலுவேன். என் குலத்தாராகிய நீங்கள் எனக்குத் துணையாயிருப்பது எனக்குப்பெரும் தைரியத்தைத் தருகிறது.

கனவான்களே!

நமது சங்கங்கள் பல ஊர்களில் ஒற்றுமைப்பட்டு ஒன்றாக உழைத்து பர்மா, செய்கோன்முதலிய இடங்களில் உண்டான கஷ்டங்களை ஒருவாறு

நிவர்த்தி செய்து கொண்டிருக்கின்றன. மலேயா, சிலோன் முதலான அயல்நாடுகளிலும் நமது வாசஸ்தலமாகிய இந்நாட்டிலும் நமது சங்கங்கள் சமூகத்துக்கு வேண்டிய காரியங்களை நலம்பெற நடத்திவருவதைப் பற்றி நான் மகிழ்ச்சியடைகிறேன். இன்னும் நமது சங்கங்களைப் பல நாடுகளிலும் பலப்படுத்தி அவைகள் மூலமாய் நமக்குள்ள குறைகளை வெளியிட்டும், நமக்கு வரவேண்டிய உரிமைகளை வசப்படுத்தியும் நம்மரபினர் அடைய வேண்டிய நன்மைகள் இன்னும் அனேகம் இருக்கின்றன. தனவணிகர்களுக்குத் தொழில் முறையிலும் அரசியல் துறையிலும் தங்களுக்குள்ள உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்ளும் விஷயங்கள் அனேகம் வருங்காலத்தில் ஏற்படக்கூடியதாகையால் நம் சமூகத்தார் நம் நாட்டிலுள்ளவர்களும் அயல்நாட்டிலுள்ளவர்களும் அவைகளின்பொருட்டாக ஆங்காங்குள்ள சங்கங்களை மேலும் மேலும் அபிவிருத்தி செய்யவேண்டியது மிகவும் அவசியமாகும்.

தமிழபிவிருத்திக்குப் பெருந்தொண்டு புரிந்து தானதரும முதலியவற்றால் தனிப்பெருஞ் சிறப்படைந்து நம் நாட்டில் முதல்வராகக் கருதப்பட்டுவருகிற சேதுபதிகளவர்களின் பெரிய பரம்பரையின் சந்ததியார்களாகிய சேதுபதி மஹாராஜா அவர்கள் இந்த வைபவத்தில் கலந்துகொண்டிருப்பது எனக்கு மிக மகிழ்ச்சியைத் தருகின்றது. என்னிடம் கொண்ட நேசத்தால் என்னைப்பற்றிக் கூறிய நன் மொழிகளுக்கு அவர்களுக்கு நன்றிபாராட்டுகிறேன்.

தமிழ், சமஸ்கிருதம் இந்த இரண்டு பாஷைகளிலும் தானடைந்திருக்கும் புலமையினால் நம் குலத்தாருக்கே அல்லாமல் தமிழ்நாடு முழுவதற்கும் பெரும்புகழ்தந்திருக்கும் பண்டிதமணி கதிரேசச்செட்டியாரவர்கள் இந்த வைபத்தில் கலந்துகொண்டதற்கு நான் நன்றியுள்ளவனாகவிருக்கிறேன். அவர்களின் அறிவின் விசாலமும், அவர்களைப்பற்றி நாம்கொண்ட நன்மதிப்பு எவ்வளவு என்பதும் நம் தமிழ்நாடு முழுவதும் அவர்களைப் பண்டிதமணிஎன்றுசிறப்பித்து அழைப்பதினாலேயே நன்றாய்த் தெரிகிறது.

நமது சமூகத்திற்கு வெகுகாலமாகப் பலவிதத்திலும் பணி செய்து வரும் எனது நண்பர், சொ. முருகப்பா அவர்களும், புதுக்கோட்டை ஷண்முகம் செட்டியார் அவர்களும் இச் சமயம் என்னைப்பற்றி நல்ல மொழிகள் சொல்லிச் சொற்பொழிவாற்றியதற்கு நன்றி பாராட்டுகிறேன்.

மேன்மை தங்கிய நகரத்தார் அவர்களே, தாங்கள் எனக்கு இன்று அளித்த வரவேற்புக்கு நான் மிக நன்றியுள்ளவனாகவிருக்கிறேன். தாங்கள் செய்த பாராட்டுதலை என்றும் மறவாமலிருப்பேன். சீரும் சிறப்பும் மிக்க தனவணிகர்களாகிய தாங்கள் அனைவரும் நீடூழிகாலம்பேரும் பெருமையும் பெற்றுத் திரண்ட செல்வமும் நிறைந்த நன் மதிப்பும் உள்ளவர்களாய் உயர்ந்துவாழ எல்லாம்வல்ல இறைவன் அருள்புரிய வேண்டுமெனப்பிரார்த்திக்கிறேன்.

உ

# தீண்டாதார் ஆலயப் பிரவேசத் தடை.

(சர்வமதாதீத சுத்தாத்வைத சத்தியதரிசன சித்தாந்த சைவப் பிரசாரகர் சென்னை, திரு, மா. நீலகண்ட சித்தாந்தியார் அவர்கள்.)

(10-ம் ஆண்டு 36-ம் பக்கத் தொடர்ச்சி)

முதலாவது மதவிஷயத்திற்பிரவேசித்தலே கூடாதாதலின் இராஜப்பிரதிநிதியும் கவர்னரும் இத்தகைய மசோதா கொண்டுவர வொட்டாது ஆரம்பத்திலேயே அடித்துப்போடுதல் அவர்கள் கடனேயாம். அவ்வாறே கொச்சிராஜாங்கத்தில்நடந்ததுமெச்சத்தக்கதே. ஏனெனின் ஆதிகாலத்தில் ஆங்கிலேய வியாபார தந்திரக்காரர்கள் ஆழ்ந்தாலோசித்ததால்விக்டோரியா மகாராணியாரும் ஏழாம்எட்வர்ட்சக்கரவர்த்தியும்ஐந்தாம்ஜார்ஜ்சக்கரவர்த்தியும் மதவிஷயத்திற்றலையிடோம் என்றுகூறிய உறுதிமொழியைக் காப்பாற்றாவிடிற் கஷ்டமாய்த்தான் முடியுமென்பதை நினைப்பூட்டுகிறோம். மூன்று சக்கரவர்த்திகளது வாக்குறுதியை இடையே மாற்ற எவருக்கும் அதிகாரமில்லை. மாற்றினால் ராஜத்துரோகமாயும்(Treason,) மதத்துரோகமாகிய பெருங்கலகமாயும் (Sedition, Riot) முடிவதிற்றடையில்லை. இஷ்டப்பிரகாரம் மதவிஷயத்திலெப்பொழுதுவேண்டுமென்றாலுஞ்சரி சட்டத்தைத்திருத்துவதென்றால், ஓர்வரையறைக்குட்பட்ட அரசாங்கம் (Limited monarchy) என்ற பெயர் எடுப்பட்டுப்போய், இட்டதே சட்டம் எனப்படுகிற ஏதேச்சாதிகார ராஜாங்கம் (Absolute monarchy) என்ற பெயர் ஸ்ரதிப்பட்டுப் போமென்க. ஏனெனின் முன்னமேயே உருதுமதி விவாகத்திற்கு அரசாங்கம் அநுமதித்து விட்டதே சாஸ்திர விரோதமாயிருக்கிறது. விதவாவிவாகத்தைத்தடுக்காததுந்தப்பாய்முடிகிறது அதோடு ஆலயப் பிரவேசவிஷயத்தையும்அங்கீகரித்துவிட்டால் தானிட்டதேசட்டமெனநடந்த ருஷ்யா தேசத்தரசன் (Czar of Russia) கதையாகவே முழுவிரோதமாய் முடியுமென்க. இன்னும் விவாகரத்து மசோதாவுந் தலை காட்டுகிறது. இத்துஷ்டபாம்பையுந் தலை நசுக்காவிடிற் பாதகண்டம் என்ற பெயரே அடியோடு மாய்ந்து நரககண்டம் என்ற பெயர் சித்திப்பதிற் றடையில்லையென்க. ஏனெனின் பாரதகண்டமாகிய இந்தியாவினது சநாதன தர்மம் வேறு. இங்கிலாந்து முதலிய நாடுகளின் நவநாகரீகம் வேறு. இந்தியாவினது பூர்வீக நோக்கம் ஆன்மார்த்தமாகிய சரியை கிரியை யோக ஞானங்களைச் செய்து முடிவு காண்கில்லாப் பேரின்பத்தினை நுகர்தலேயாம். இங்கிலாந்து, பிரான்சு, அமெரிக்கா முதலான நாடுகளின் நோக்கம் யோனிக்குந் தீனிக்குமே யழநலாகிய உடலோம்புதலுஞ் சிற்றின்பத்தை

யனுபவிக்க முயற்சித்தலுமேயாம். இதைக் குறித்துப் பின்னால் விஸ்தாரமாய் விவரிப்போம்.

## சிவாகமம் சிவவாக்காதலின் பரிபாகிகள் பொருட்டுச் சத்தியமே போதிக்குமெனல்.

சிவாகமம், சண்டாளர்கள் ஆலயத்துள் நுழையக் கூடாதென்று விதித்தல்போல், தூர ஸ்திரீயும் உள் நுழையக் கூடாதென்றும், கோழி, புறா, குரங்கு, பக்ஷிகள், பாம்புகள், கழுதை, பன்றி, நாய் முதலியனவும் நுழைந்து விட்டாற் பிராயச்சித்தஞ் செய்யவும், சிவ தீக்ஷை பெற்ற ஆதிசைவர் தவிர சிவதீக்ஷை பெற்ற, பெறாத இதர பிராமணர் முதலாயினோர் கூடக் கர்ப்ப கிருகத்திற் செல்லக்கூடாதெனவும், சிவலிங்கம், மற்றைய விக்கிரகங்களைத் தொடக்கூடாதெனவும், தொட்டுப் பூசிக்கக்கூடாதெனவும் விதித்தலின், சிவாகமம் மேலாகிய சத்திய விஷயத்தினையே போதிப்பதல்லாது பட்சபாதமாக ஒன்றுங் கூறாதென்றோர்ந்து கொள்க. ஆகவே விதி விலக்குகட்குக் கட்டுப் பட்டு நடக்க, திருமூல நாயனாருந் திருமந்திரத்தில் திருக்கோயிலிழிவுஎன்னுந் தலைப்பின்கீழ்,

பேர்கொண்ட பார்ப்பான் பிரான்றனை யர்ச்சித்தாற்
போர்கொண்ட வேந்தர்க்குப் பொல்லா வியாதியாம்
பார்கொண்ட நாட்டுக்குப் பஞ்சமுமா மென்றே
சீர்கொண்ட நந்தி தெரிந்துரைத்தானே",

எனக் கூறுகின்றார்.

இப்பாசுரத்தில் 'பேர்கொண்ட பார்ப்பான்' என்றது ஆதிசைவப் பிராமணனல்லாத ஏனைய சிவதீக்ஷைபெற்ற பிராமணனாகிய மகாசைவனையுஞ் சிவதீக்ஷைபெறாத சாமானியப் பிராமணனையுமே குறித்தல் சிவாகம விதியாற் காண்க.

இனிச் சிவாகம விஷயத்தினைத் திரட்டி வெண்ணெயுருண்டை போற் றமிழிற் சைவர்க்கு நுகர்விக்குஞ் சைவ சமயநெறியென்னும் நூலின் கண் மறைஞான சம்பந்த நாயனாரும்,

"இட்டமுடன் றந்த மிலக்கும்போ திற்பாரேல்
கட்ட நாய் நீசர்கரம்"

என்றார்.

இதன் பொருள்: பிரீதியோடு தந்த சுத்தி செய்யும்போது மலத்தையும் நீசரையும் நாயையும் கழுதையையும் பாராதே. என்பதே. பல் விளக்கும்போதுகூடப்பாராதே யென்றால் ஏனையவிஷயங்கட்குக்கேட்பானேன்? இன்னும் அப்பெருமானார், "உண்ணேலுடலிலுறப்பற்றார் சோறந்தியசர்



வண்ணார் முதலோர் மனை," என்று கூறுகிறார். அதன் பொருள்:—"அங்கஹீனர், புலையர், வண்ணார் முதலாயினருடைய வீட்டிலன்னத்தைப் புசியாதே", என்பதாம். வீண் விஷயத்திற்கு உண்ணாவிரதம் பூண்டு பாவ மூட்டையைச் சுமப்போர் சத்விஷயமாகிய இந்த உண்ணாவிரதத்தை மேற்கொள்வாராக. சமபந்தி போஜனக் கூச்சலிடுவோருங் கவனிப்பாராக. இது மட்டுமா! இன்னுங் கூறுகின்றார். "ஈனர் புலையசிருதுமதி நாய் பன்றி யேனையவும் பாராவிடத்து." "இருந்தாகுதி செய்யிவற்றொன்று பார்க்கிற் சொரிந்திடக் கக்குண்ட கறிசோறு" இவற்றின் பொருள் வருமாறு:— "ஈன சாதியாரும், புலையரும், இருதுமதியும், நாயும், பன்றியும் பிறவும் பாராத விடத்தில் இருந்து போசனம் பண்ணு. இவற்றுள் ஒன்று பார்க்குமாயின் உண்ட பதார்த்தம் சோறு இவற்றைச் சொரியும்படி கக்கு" என்பதே. இது திருஷ்டி தோஷத்தைக் காட்டலறிக. ஸ்மிருதியிலும் இவ்வாறே கூறப்படுகின்றது. காரணம் என்னவெனின் கண்ணில் ஒளி யிருக்கின்றது. அது அக்கினியம்சம், கண்ணொளியின் சக்தி சேய்மைக் கண்ணுளதாய சூரிய சந்திர நட்சத்திரங்களையுஞ் சென்று காணுந் தன்மைத்து. மற்றைய செவி முதலான இந்திரியங்கட்கு இவ்விதத் தன்மையில்லை. தங்களிடத்து வந்த சத்தம், ஸ்பரிசம் (ஊறு), ரசம் (சுவை), கந்தம் (வாசனை அல்லது நாற்றம்) ஆகிய இவற்றினையே யுணரும். கண்ணொளி அக்கினி ஸ்வரூபமாகையினாலே சென்று சுடுந் தன்மையும் வாய்ந்தது. "இவன் கண் கெட்ட கண்" என்று சொல்வதும் உலக வழக்கு. "யார் கண்பட்டதோ," "எப்படிப் பார்க்கிறான் பார்" என்றுஞ் சொல்வார்கள். ஆகையினால் புலையர் முதலியோர் பார்க்கப் புசிக்கக்கூடாதென்றார். மேலும் மீனுக்குக் கண்ணில் ஓர் அரிய சக்தி வாய்திருப்பதால் தன் சினையை நோக்கின மாத்திரத்தே அவையெல்லாம் பொரிந்து குஞ்சுகளாக வெளிப்படுதலுங் காண்க. இதனால் மீனாட்சி யென்றபோது மீனைப் போன்ற கண்ணுடையாள் என்பது பெறப்பட்டு எண்ணிறந்த ஆன்மாக்களுடைய கன்மத்திற் கேற்றவாறு அவர்களைப் பலவாறாகச் சிருஷ்டி செய்து சுக துக்கங்களில் அழுத்திக் காத்தல், அழித்தல், மறைத்தல் என்ற (௪) கிருத்தியங்களைச் செய்பவளென்றும், விசாலாட்சி என்றபோது விசாலமுற்ற கண்களையுடையாளென்பது பெறப் பட்டுப் பக்குவான்மாக்களுக்கு அநுக்கிரகம் என்னும் ஐந்தாவது தொழில் புரிந்து மோட்சத்தினை யருளுகின்றவளென்றும், காமாட்சி யென்றபோது சிவபெருமானிடம் ஆசையுற்ற கண்ணையுடையா ளென்பது பெறப்பட்டு அப்பெருமானுக்கு அபேதமாகிய அபார சக்தி (வல்லமை) யாயிருந்து பஞ்சகிருத்தியம் நிகழ்த்தும் பராசக்தியாயிருப்பளென்பதும் பெறப்பட்ட

வாறு காண்க. ஒருவன் தனக்கு அபேதமாகிய சத்தியில்லாமல் ஒரு காரியமுஞ் செய்ய முடியாததுபோற் சிவமுந் தனக்கு அபேதமாகிய சத்தியையொழிந்து ஒரு காரியமுஞ் செய்யாரென்க. இதனானே நல்ல பார்வை, தீயபார்வை என்னும் இரண்டும் பெறப்பட்டுச் சுக துக்கங்களை யுண்டு பண்ணுமென்றோர்க. "என்ன குளிர்ந்த பார்வையாகப் பார்க்கிறான்" என்றும், "அவனென்ன சுடுகிறதுபோற் பார்க்கிறான்" என்றுங் கூறும் உலகியலைக்கண்டமைக. Mesmerism Hypnotism மூர்மார்க்கட்டில் மாலையில் நடக்கும் கண் மயக்குவித்தையால் ஆளை மூர்ச்சையடையச் செய்வதையுங் காண்க.

ஆகவே "திருஷ்டி தோஷங்கிடையாது" என்று கூறுவது ஆராய்ச்சியற்ற மடவோர் கூற்றாய் முடிதல் காண்க. இன்னும் பார்ப்பதே கூடாதெனின் புலையர் முதலாயினோர் உராய்தலும் தீண்டலுஞ் சமபந்தி போஜனஞ் செய்தலும், ஆலயப் பிரவேசஞ் செய்தலுங் கலப்பு விவாகம் புரிதலும் எவ்வாறு மேலோர்க்குகக்கும் கடவுளுக்கு முசுக்கும் என்பது யாங்கூறவும் வேண்டுமோ? ஒருபோதும் உகக்காது உகக்காது. இதனால் (க)ம் இலக்கத்திற் கூறிய பூர்வபட்சம் பலவற்றிற்குச் சமாதானம் பெறப்பட்டமை காண்க. நந்தனார், கண்ணப்பர் விஷயம் பின்னர்க் கூறுதும். ஆனால் நாயைப் பல பார்ப்பாரும் வளர்க்கின்றனரே யென்றால் அவர்கள் வைதிகர்களாகார். கேவலந் துவிஜ பந்துக்களேயாம். இனி, கோமாமிசம், மதுபானம், பிணமறுத்தல் முதலியவற்றை அவர்கள் கைக்கொண்டால் அவற்றையெல்லாம் நீக்கச் சட்டங்கொண்டு வருவதே சால்புடைத்து. அதை விட்டுப் பழிபாவத்திற்கஞ்சாது வீண் விஷயத்திற்குச் சட்டம் புகுத்தப் பார்ப்பது பகவானுக்குகக்காது. குற்றத்தைக் குணமாய்க் கொள்ளற்க. இவ்விஷயத்தைக் குறித்துத் தமிழில் வெளிவந்துள்ள சிவதருமோத்தரம் என்னும் உத்தமோத்தம நூலினும் பரக்கக் காண்க. நாயனாரும் சிற்றினஞ் சேராமை என்ற அதிகாரத்தால் விளக்கல் காண்க.

### சண்டாளர் என்னும் பதம் தீண்டாதாரையே குறிக்குமெனல்.

"பறையன், தூரஸ்திரீ, பதிதன், பிரசவித்தவள், பிணம், பிணத்தைத் தொட்டவன் இவர்களைத் தெரியாமல் தொட்டால் ஸ்நானஞ் செய்தாற் பரிசுத்தனாகிறான்" என்று மனுஸ்மிருதி. ஐந்தாம் அத்தியாயம் எண்பத்தைந்தாம் சுலோகமும்,

"பதிதன், சண்டாளன், பிரஸவ ஸ்திரீ, தூரஸ்திரீ, பிணம் இவர்களைத் தொட்டவன், தொட்டவனைத் தொட்டவன், இவர்களைத் தொட்டால் வஸ்திரத்துடன் ஜலத்தில் ஸ்நானஞ் செய்தாற் சுத்தனாவான்"



என்று கௌதமஸ்மிருதியும் கூறுகின்றன. இன்னும் பல ஸ்மிருதி கர்த்தாக்கள் சிவாகமத்திற்கு விரோதமின்றியே கூறுகின்றனர்.

ஆனாற் கலியுகத்திற் பின்பற்ற வேண்டிய பராசர ஸ்மிருதியில் தீண்டாமையைக் குறித்து யாதேனும் விதிக்கப்பட்டுளதாவெனச் சிலர் உசாவக்கூடும். அதனையுஞ் சற்றாராய்வாம்:—

சக்கிலி, சண்டாளன் இவர்களோடு பிராமணன் பேசினாற் பிறகு பிராமணர்களோடு பேசியுங் காயத்ரியையொருதரம் ஜெபித்தும் சுத்தனாகிறான்.

சண்டாளனைப் பார்த்தவுடனே சூரியனைப் பார்க்கவேண்டும். அவனைத் தொட்டால் துணியுடன் ஸ்நானஞ் செய்யவேண்டும்.

சண்டாளனுடன் தூங்கினவனுக்கு மூன்று நாளுபவாசத்தை விதிக்கவேண்டும். சண்டாளனுடன் வழி நடந்தவன் காயத்ரியை ஸ்மரித்தாற் சுத்தனாகிறான்.

சண்டாளனால் வெட்டப்பட்ட கடவாபிகளில் தெரியாமற் பிராமணன் தண்ணீர் குடித்தால் ஒருநாள் ஒரேவேளை போஜனத்தினாற் சுத்தனாகிறான்.

சண்டாளன் பாத்திரம்பட்ட கிணற்று ஜலத்தைக்குடித்த பிராமணன் மூன்றுநாள்கோமூத்திரத்தையும் யவ அரிசிமாவையும்புசித்துச்சுத்தனாகிறான்.

சண்டாளனுடைய பாண்டத்திலிருக்கும் ஜலத்தைக் குடித்த பிராமணன் பதிதனாவான். அந்தப் பிராமணன் பிராஜாபத்ய கிருச்ரத்தைச் செய்யக் கடவன். இந்தப் பிராயச்சித்தமானது அப்படிக் குடித்த ஜலத்தை வாந்தி பண்ணினால்தான். அந்த ஜலம் சரீரத்திற் செரித்து விட்டால் ஸாந்தபன மென்கிற விரதத்தைச் செய்யவேண்டும்.

பிராமணன் குடித்தாற் சாந்தபனமும் க்ஷத்திரியன் பிராஜாபத்யமும் வைச்யன் அதிற் பாதியும் சூத்திரன் அதிற் காற் பாகமும் பிராயச் சித்தஞ் செய்யவேண்டும்.

சண்டாளனுடைய பாத்திரத்திலிருக்கும் ஜலம், தயிர், பால், இவைகளைச் சாப்பிட்ட மூன்று வருணத்தாரும் பிரம்ம கூர்ச்ச பானத்துடன் உபவாசமிருக்கவேண்டும். சூத்திரனுக்கு உபவாசத்துடன் சக்திக்கீடாகத் தானம் செய்வது பிராயச் சித்தம்.

அறியாமற் சண்டாளன் அன்னத்தை புசித்த பிராமணன் பத்துநாள் யவமென்கிற அரிசியைக் கோமூத்திரத்துடன் சாப்பிட்டுச் சுத்தனாகிறான்

முற்கூறியவாறு அன்னத்தைப் புசித்தவன் கோமூத்திரத்துடன் யவ அரிசியைத் தினம் ஒன்றுக்கு ஒரு கவளமாக நியமத்துடன் புசித்து விரதமிருக்கவேண்டும்.

ஒரு மாதமாவது அரை மாதமாவது சண்டாளரோடு சகவாசம் நேர்ந்தால் யவ அரிசியினாலும் கோமூத்திரத்தினாலும் அரை மாதம் போஜனஞ் செய்து சுத்தனாகிறான்.

ஆகவே இந்தச் சுலோகங்களைக் கண்ட உத்தமர் கழிபேருவகை பூப்பர். மத்திமர் தாங்கள் இதுகாறுஞ் செய்துவிட்ட காரியத்திற்குத் துக்கித்துப் பிராயச்சித்தஞ் செய்து கொள்வர். அதமர் இதெல்லாம் நம்மால் முடியாதென்று நினைச் செய்யாமலிருப்பர். அதமாதமர், 'கல்லாத மாந்தர்க்குக் கற்றுணர்ந்தார்ச் சொற் கூற்றம்' என்னும் ஔவைப் பிராட்டியார் வாக்குக் கிணங்கப் பிடிவாதமாய் வீண்பிரசாரஞ் செய்து தாமுங் கெட்டுப் பிறரையுங் கெடுத்துக் குருடுங் குருடுஞ்சேர்ந்து குழியில் விழுந்தவாறே என்று நரகப் படுகுழியில் வீழ்வர். இது சத்தியமென்பது இவ்வளவு சுலோகங்களை யெடுத்தெடுத் தூட்டிய பின்னும் உணர முடியவில்லையா! ஐயோ பரிதாபம்!

"பாதக்குறட்டிலிருந்துகொண்டும் கட்டிலிலிருந்துகொண்டும் நின்றுகொண்டும், நாய் சண்டாளனிவர்களைப் பார்த்துக்கொண்டும் அருந்தல் கூடாது. அப்படி அருந்தும் உணவை விடவேண்டும்" ஆகவே பூட்ஸ் போட்டுக்கொண்டும் சோபாவின்மேற் சாய்ந்துகொண்டும், போதாக்குறைக்குக் கூட நாயை வைத்துக்கொண்டுந் தீண்டாதாரோடு சமபந்தி போஜனஞ் செய்துகொண்டுங் கலப்பு விவாகஞ் செய்துகொண்டுங் காலத்தைக் கழிப்போர் கதி அதோகதி யென்பது யாமெடுத்துக் கூறவும் வேண்டுமா?

"பிராமணன் சண்டாள ஸ்திரீயையாவது சக்கிலி ஸ்திரீயையாவது புணர்ந்தாற் பிராமணர்களுடைய அனுமதிபெற்று மூன்று நாள் உபவாசம் (உண்ணாவிரதம்) இருந்து சிகை (குடுமி)யுடன் மொட்டை யடித்துக்கொண்டு இரண்டு பிராஜாபத்ய கிருச்ரத்தைச் செய்து இரண்டு பசுக்களைத் தக்ஷிணையாகக் கொடுத்துச் சுத்தியடைகிறானென்று பாராசரர் சொன்னார்." இதைக் கேட்ட பிறகுமா கலப்பு விவாகத்திற்குக் கனவு காண்பது? பசுவைத் தானஞ் செய்ய வேண்டுமென்றால் அதைவிட்டுப் பசு மாம்சம் உண்பாரோடா விவாகம்! பேஷ். நன்றாயிருக்கிறது ஞாயம்! இது பெருங் கலிக்கூத்தே! இதைப்பற்றிக் கோவதப் பிராயச் சித்தப் பிரகரணத்திற் பின்னும் பேசி அக்காரணத்தாலும் அவர்களோடு சம்பாஷிப்பதுந் தீண்டுவதும் பெரும் பாதகமென்று ஸ்தாபிப்பேம். சற்றுப் பொறுமின். இதர மதஸ்தர்களைப் பற்றி எமக்கு அவசியமில்லை. அவர்களுக்குச் சொன்னாலுங் கேளார்கள். "இந்துக்கள், சநாதனதர்மிகள்" என்று "ஆசை வெட்கமறியாது" என்னும் பழமொழிக்கிணங்கப் பெரும்பேரை வைத்துக்



கொண்டு சநாதனதர்ம சட்டதிட்டத்திற்குட்படாமல் வேர்ப் புழுவாகவும், கோடரிக் காம்பு குலத்திற்கீனம் என்பதுபோன்றும் நடந்துகொள்ளுங் கூட்டத்தைப்பார்க்கத்தான் மனக்கசப்பதிகரிக்கிறது. கூழுக்காசைமீசைக்கு மாசையா! சண்டாளர்களைத்தொட்டவர்களைத்தொட்டவர்களையே தீண்டக் கூடாதென்று முன்னரேயே சுலோகங்களெடுத்துதகரிக்கப்பட்டதென்றால் அத்தீண்டாதார்களை வளர்ப்பவர்களும் அவர்களோடு உண்பவர்களும் அவர்கள் வீட்டிற் சாப்பிடுபவர்களும் கலப்பு விவாகஞ் செய்பவர்களும் எப்படி இந்துக்களாவர்! எப்படிச் சநாதனதர்மிகளாவர்! இவர்களை யெல்லாம் இந்துக்களல்ல வென்று வொதுக்கவே சட்டம் பிறப்பித்தலாவசியகமாயிருக்கிறது. இந்து மதத்தின் புனிதத்தை இவர்களன்றோ கெடுக்கின்றனர். இவர்களன்றோ கலிகாலக்கொடியோர்! அந்நியமதத்தினரை நோவானேன்? அத்தகைய போலி ஹிந்துக்களே ஆலயப் பிரவேசஞ் செய்யக் கூடாதென்று சட்டம் பிறப்பித்தல் அரசாங்கத்தார் கடனேயாம். ஆகவே இப்பேர்ப்பட்டவர்களுங் கன்ம சண்டாளர்களாய் விடுகிறபடியால் ஜாதிச் சண்டாளர் மாத்திரமன்று. இவர்களும் இனி ஈஸ்வரன் கோயில் பொது என்று சொல்லவுமிடமில்லை; நுழையவுமிடமில்லை யென்றுணர்வாராக. குரானுக்குக் கட்டுப்படாதவன் மகம்மதியனாவனோ! பிராமணர்கள் மாத்திரந்தானே சண்டாளரோடு கலப்பு விவாகஞ்செய்யக்கூடாதெனச் சுலோகங் காட்டப்பட்டது. "நமக்கென்ன நாம் தாராளமாய்ச் செய்துகொண்டு கோயிலுள் நுழையலாம்" எனப் பிறர் வாய் திறப்பாராயின் கீழ்வருமாறு சுலோகங்கள் அன்னாருக்கு வாய்ப்பூட்டிடுகின்றன.

க்ஷத்திரியனாவது வைச்யனாவது சண்டாள ஸ்திரீயைப் புணர்ந்தால் இரண்டு பிராஜாபத்ய கிருச்ரத்தைச் செய்து இரிஷபங்களோடு கூடின இரண்டு பசுக்களைத் தானம் செய்யவேண்டும்.

சூத்திரன் சக்கிலி ஸ்திரீயையாவது சண்டாள ஸ்திரீயையாவது புணர்ந்தால் பிராஜாபத்ய கிருச்ரத்தைச் செய்து இரிஷபங்களோடு கூடின நான்கு கோதானஞ்செய்யவேண்டும். ஆகவே வரவர அபராதம் முட்டையிட்டுக் குஞ்சு பொரித்ததிகரித்தல் காண்க. நாலு காசுப் பாலுக்கே கஷ்டப்படுஞ் சூத்திரன் நாலு பசுக்கள் எருதுகளுக்கெங்கிருந்துபோவான்! இரண்டு பிராஜாபத்ய கிருச்ரத்தை எவ்வாறு செய்து முடிப்பன்! ஒருதரம் புணர்ந்தாலே இவ்வளவு வெகுமானமென்றாற் கலப்பு விவாகமா? மாடு தின்னும் புலையரோடு மணத்தலா! இன்னும் பராசர ஸ்மிருதி முதலியவற்றால் நான்காஞ்சாதியாகிய சூத்திரருக் கன்னியமாகச் சண்டாள ஜாதி பெறப்பட்டவாறுங் கண்டமைக. ஆலயப் பிரவேசங் கூடாதென்பது நந்தனார் சரித்திரத்தாலும் நன்கு வலியுறுத்தப்படும் நிற்க, தாயோடேனும்

தங்கையோடேனும் மகளோடேனும் எவன் மோகித்துப் புணர்கின்றனோ அவனுக்குப் பெரும்பிராயசித்தம்விதித்திருத்தலின் ஆணவத்தடிப்பையும் இந்திரியங்களின் சேஷ்டையையுமடக்கவே நீண்டாமையேற்பட்டது பேருபகாரமாதல்காண்க. ஆகவே பராசர ஸ்மிருதி மூச்சுவிடாவண்ணம் மூக்கைப்பிடித்தல் காண்க. இதுவே அமையுமாகலின் மற்றையஸ்மிருதிகளை விரியஞ்சி விடுத்தாமென்க.

ஆனால் நம்மோடு அவர்கள் பழகினால் நாகரீகமடைந்து மாடுதின்பதையும் பசுக்கொலையையும் பறக்கூத்தாடுதலையும் விட்டுவிடுவரென்றால் நவ நாகரீகமடைந்த ஐரோப்பியர், அமெரிக்கர், பர்மியர், ஜப்பானியர், சீனர், மகம்மதியர் முதலாயினோர் மாடு தின்பதை விட்டனரா? உருசி கண்ட பூனை விடுமா? பழக்க வாசனை போகுமா? மகம்மதியர் நீங்கலாக மற்றவர் குடித்துவிட்டு ஆணும்பெண்ணுங் கைகோர்த்துக் கட்டிக் கொண்டாடுவதை (Dance) விட்டனரா? சினிமாக் காட்சி சிரிப்புக்கிடமாயிருக்கிறதே. ஒன்று இரண்டா ஆயிரக்கணக்கான ஐரோப்பிய அமெரிக்க ஸ்திரீகள் வெட்கத்தை விட்டு வெளிக்கிளம்பி முக்கால் நிர்வாணத்தைக் காட்டி அரசாங்கத்தார் இடம் விட்டாற்போதும் முழு நிர்வாணத்தையுங் காட்டிக் காசு பறிக்கலாமென்ற பேராவலுற்றுடுகின்றனரே! இதுதானா நாகரீகம்! வீண் கல்வியைக் கற்று வேலைக்குத் திண்டாட்டமுற்றுக் கடைசியில் ஆணும் பெண்ணும் ஆலிங்கனஞ் செய்து காட்டி வயிறு வளர்க்கிறதே பெருந் தொழிலாகக் கொள்ளல்தானா நாகரீகம்! இப்போதே உலக முழுதுங் கெட்டதுபோற் புனிதமாய பரத கண்டமும் அவர்களைப் பார்த்து (Copy யடித்து) நாளடைவில் வெகு வேகமாகப் பல விஷயத்திலுங் கெட்டுக்கொண்டே போகிறது. இதுதானா முன்னேற்றம். இல்லை இல்லை. இது பின்னிறக்கமே. என்னை? நவநாகரீகமானது அதாவது சினிமாக் காட்சி முதலியவை திருட்டுத்தொழிலையும்மோசஞ் செய்தலையும் நம்பிக்கைத் துரோகஞ் செய்தலையுங் குடித்தாடுதலையும் வியபிசாரஞ் செய்தலையுமே விருத்திசெய்துசிறுவர் சிறுமிகளையும் வெகுவாய்க் கெடுத்துவிடுகின்றது.

இந்தச்சினிமாக்காட்சி முதலியவற்றைக் குறித்து இன்னும் பின்னால் விஸ்தரிப்போம். ஆகவே எல்லோரையுங் கெடுக்குஞ் சினிமாக் காட்சி முதலியவை காட்டக் கூடாதென்றே சட்டம் பிறப்பித்தலாவசியகம்! அதற்குப் புண்ணியங்கட்டிக்கொள்ளக் கூடாதா பிரபுக்களே! ஐயோ அநியாயமாய் நம்நாடு எடுத்ததெற்கெல்லாம் முன்னேற்றம் முன்னேற்றமென்றுளறிச் சற்றும் முன்னேற்றமின்றிப் பின்னிறக்கமடைந்து ஒரேயிறக்கமாய் நரகக்குழியில் எல்லாரையும் இறக்கி மேலே யெழவிடாமற் கல் தூக்கிவைக்கப்படுகின்றதே.

(தொடரும்)

உ

# ஆலய தரிசனம்.

(அச்சுவேலி, சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக்குருக்கள் அவர்கள் எழுதிவெளியிட்ட 'சைவப்பிரகாசிகை' நான்காம் புத்தகத்திலிருந்து அனுவதித்தது)

அநாதிமுத்த சித்துருவாகிய சிவபெருமான் ஒருவரையே பரமபதி என்று துணிந்து, அவர் அருளிச்செய்த வேதாகமங்களிற் கூறியபிரகாரம், தங்கள் நிலைக்கு ஏற்றவாறு அவரை வழிபடுபவர்களே சைவர்எனப்படுவார்.

சிவபெருமானை அன்பர்கள் வழிபடுந் தானங்கள் மூன்றும். அவை ஆலயத்துள்ள இலிங்கம், சிவனடியார் திருவேடம், ஆன்மா என்பனவாம்.

இந்த வழிபாட்டுக்கு அங்கங்கள், சிவதிரவியம் விரும்பாமை, கொலை செய்யாமை, புலாலுண்ணாமை, களவுசெய்யாமை, பிறர்மனை விரும்பாமை, இரக்கம், வாய்மை முதலியனவாம்.

சைவ சமயிகள் விபூதியும் உருத்திராக்ஷமும் தரித்துக்கொண்டே சிவபுண்ணியங்கள் செய்தல்வேண்டும். விபூதி உருத்திராக்ஷம் தரியாது செய்யும் வழிபாட்டினாற் பயன் இல்லை.

திருக்கோயிலுள் இருக்கும் சிவலிங்கம் பரார்த்த லிங்கம் எனப் பெயர்பெறும். அது சுயம்பு லிங்கம், காணலிங்கம், தைவிகலிங்கம், ஆரிடலிங்கம், மானிடலிங்கம் என ஐந்துவகைப்படும். அவற்றுள் சுயம்புலிங்கம் தானே தோன்றியது. காணலிங்கம் விநாயகர் சுப்பிரமணியர் முதலிய கணர்களாலே தாபிக்கப்பட்டது. தைவிகலிங்கம் விட்டுணு முதலிய தேவர்களாலே தாபிக்கப்பட்டது. ஆரிட லிங்கம் இருடிகளாற்றாபிக்கப்பட்டது. அசுரர் இராக்கதர்களாலே தாபிக்கப்பட்டதும் அது. மானுடலிங்கம் மனிதராலே தாபிக்கப்பட்டது.

சதாசிவமூர்த்தியுடைய ஐந்து முகங்களினின்றுந் தோன்றிய காசிபர் முதலிய ஐந்து முனிவர்களுடைய கோத்திரத்திற் பிறந்தவர்களாய், சமய தீக்ஷை, விசேடதீக்ஷை, நிருவாணதீக்ஷை, ஆசாரியாபிடேகம் ஆகிய நான்கும் பெற்றவர்களாய், கருமங்களைச் சிரத்தையோடு விதிப்படி செய்ய வல்லவர்களாய், உள்ள சிவாசாரியர்களே பரார்த்தலிங்க பூசைக்கு அதிகாரிகள்.

அருச்சகர்கள் கிழக்கும் தெற்கும் சந்நிதியிருந்தால் வலப்பக்கத்தும், மேற்கும் வடக்கும் சந்நிதியாயின் இடப்பக்கத்தும் நின்று பூசைசெய்ய வேண்டும்.

அகமும்புறமும் தூயராய், தீக்ஷைபெற்றவராய், ஆகம புராணங்களைக் கற்றுணர்ந்தோராய், சிவபக்தி வாய்ந்தவர்களாய் உள்ள சைவர்களே சிவாலயத்தை நடத்துதற்கு அதிகாரிகள். இம்மைப் பயனாகிய பொருள்

முதலியவற்றைக் குறியாது, திருக்கோயிலை விதிப்படி நடத்துவோர் இம்மையிற் புகழ்பெற்றுப் பின்பு சிவபதமடைவர். சிவத்திரவியங்களைத் திருடுவோரும், முந்தினபடித்தரங்களைக் குறைத்தோரும், இம்மையிற் பழிசேர்ந்து, பின்பு நரகில் வீழ்ந்து இடருழப்பார்கள்.

திருக்கோயிலிலே பூசைமுதலியவைகள்விதிப்படி நடத்தல்வேண்டும். தவறுமாயின், உலகத்துக்குத் தீமை விளையும்.

சைவர்கள் தினந்தோறும், ஆசாரத்தோடு, வஸ்திரம் இரண்டு தரித்துக்கொண்டு, அநுட்டானம் முடித்துத்திருக்கோயிலுக்குப் போகக்கடவர். ஸ்நானம்முதலியநியங்கள் இல்லாது திருக்கோயிலுக்குச்செல்லுதல்கூடாது.

கோயிலுக்குப் போகும்பொழுது வெறுங்கையுடனே போகாது, தேங்காய்முதலியயாதேனுங்கொண்டுசெல்க. பொருள்களில்லாதவர் பத்திர புஷ்பங்கொடுத்து வணங்குக. அதுவுங் கூடாதவர் சந்நிதியில் உள்ள குப்பை முதலியவற்றைப் போக்கி வணங்கக்கடவர்.

திருக்கோயிலுக்குச் சமீபித்தவுடனே தூலலிங்கமாகிய கோபுரத்தை வணங்கி, கைகுவித்து உள்ளாகப் புகுந்து, பலிபீடத்துக்கு இப்பால் வணங்கக்கடவர். மைந்தர்கள் அட்டாங்க நமஸ்காரமும், பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரமும் செய்தல்வேண்டும்.

அட்டாங்க நமஸ்காரமாவது தலை, செவியிரண்டு, கையிரண்டு, மோவாய், புயங்கள் இரண்டு என்னும்எட்டுறுப்புக்களும்நிலத்திலே பொருந்தும்படி வணங்குதலாம். பஞ்சாங்கநமஸ்காரமாவது தலை, கைகள் இரண்டு, முழந்தாள் இரண்டு என்னும் ஐந்து உறுப்புக்களும் நிலத்திலே பொருந்த வணங்குதலாம். திரயாங்க நமஸ்காரம் ஆடவர் பெண்களாகிய இருவருக்கும் பொது. திரயாங்க நமஸ்காரமாவது சிரசிலே இரண்டு கைகளையும் குவித்தலாம்.

நமஸ்காரம்மூன்றுதரமாயினும், ஐந்துதரமாயினும், எழுதரமாயினும், ஒன்பதுதரமாயினும் செய்க. ஒருதாம்இருதரம் பணிந்துஎழுதல் குற்றம்.

கிழக்கு நோக்கிய சந்நிதியில் பலிபீடத்துக்கு இப்பால் அக்கினி மூலையில் சிரசை வைத்து, மார்பு நிலத்திலுற வலக்கையை முன்னும் இடக்கையைப் பின்னும் நேரே நீட்டி, பின் அம்முறையே மடக்கி, வலப் புயமும் இடப்புயமும் பூமியிலேபொருந்த, கைகளை அரையைநோக்க நீட்டி, வலக்கன்னத்தையும் இடக்கன்னத்தையும் தரையைத் தீண்டச் செறித்து, நகஸ்காரம் பண்ணக்கடவர். தெற்குநோக்கிய சந்நிதியிலும், மேற்குநோக்கியசந்நிதியிலும் நிருதிமூலையில் சிரசைவைத்து, முன்போலப் பணியக்கடவர். வடதிசையை நோக்கும் சந்நிதியில் பலிபீடத்துக்கு வாயு மூலையில் சிரசுவைத்து முன்போல நமஸ்கரிக்கக்கடவர்.



இவ்வகையாக வணக்கஞ்செய்து, எழுந்து கைகுவித்துக்கொண்டு, சிவபெருமானுடைய திருவடிகளைச் சிந்தித்து, கால்களை மென்மெல வைத்துப் பிரதக்ஷிணம் செய்க.

கொடிமரநிழலையும் தூபிநிழலையும் கடத்தல் கூடாது. பிரதக்ஷிணம் பண்ணும்பொழுது அந்த நிழலின் மூன்று கூறுநீக்கி, மற்றிரண்டு கூற்றிற் செல்லக்கடவர். திருவிழாவில் பெருமானுடன் செல்லிற் பாவமில்லை. அபிஷேககாலத்தில்உட்பிரகாரத்தில்பிரதக்ஷிணம், நமஸ்காரம் செய்தல்ஆகாது.

பிரதக்ஷிணம் செய்தபின்பு சந்நிதானத்தில் நகஸ்கரித்து, துவாரபாலகரையும் திருநந்திதேவரையும், வணங்கி அனுமதிபெற்று உள்ளேபோகக் கடவர். போய், விநாயகருடைய சந்நிதானத்தில் நமஸ்காரம்பண்ணி, முட்டியாகப் பிடித்த இரண்டு கைகளினாலும் நெற்றியிலே மும்முறை குட்டி, வலக்காதை இடக்கையினாலும், இடக்காதை வலக்கையினாலும் பிடித்துக்கொண்டு, மும்முறை தாழ்ந்தெழுந்து, நமஸ்காரம் பண்ணுக.

பின்னர் தலையிலேனும் இருதயத்திலேனும் கைகளைக் கூப்பிக் கொண்டு, சிவலிங்கப்பெருமானுடைய திருமுன்சென்று, தியானஞ்செய்து பத்தியோடு தோத்திரம் செய்யக்கடவர். அங்கே அருச்சகரைக் கொண்டு அருச்சனை செய்வித்து, இயன்ற தக்ஷிணை கொடுக்கக்கடவர்.

பின்பு நடேசர், தக்ஷிணாமூர்த்தி, சோமாஸ்கந்தர், சுப்பிரமணியர் முதலிய மூர்த்திகளையும், சமயாசாரியரையும் வணங்கக்கடவர். அதன் பின் தேவியினுடைய திருச்சந்நிதானத்தையடைந்து வணங்கக்கடவர். இறுதியில் விபூதிபெற்றுத் தரித்துக்கொண்டு, சண்டேசுரர் சந்நிதியை யடைந்து, மும்முறை கைகொட்டி, தரிசனபலத்தைத் தரும்படி பிரார்த்திக்க.

அதன்பின் மீட்டும் திருநந்திதேவரை வணங்கிப் பலிபீடத்துக்கு இப்பால் மும்முறை விழுந்து வணங்கி, ஸ்ரீபஞ்சாக்ஷரத்தை இயன்றளவு செபித்து வீட்டுக்குச் செல்லக்கடவர்.

காலையில் தரிசித்தவர்களுக்கு இரவிற் செய்த பாவம்போம். உச்சிக் காலத்தில் தரிசித்தவர்களுக்குப் பிறந்தநாள் தொடங்கிச்செய்த பாவம் போம். சாயங்காலத்தில் தரிசித்தவர்களுக்கு எழுபிறப்பிலும் செய்த பாவம் போம். ஆதலால் சைவசமயிகள் யாவரும் தவறாது ஆலயதரிசனம் செய்யக்கடவர்.

சோமவாரம், அட்டமி முதலிய புண்ணியகாலங்களில் ஆலயதரிசனம் செய்தல் மேலாகிய சிவபுண்ணியமாம். ஈசுரனைச் சிந்தித்துக்கொண்டு அங்கப்பிரதக்ஷிணம் செய்வோர் முத்தியடைவர்.

186956

## கலியின் சுபாவமும் அதை நீங்கும் விதமும்.

கலியுகத்திலே ஆயிரத்துள் ஒருவனே மிகுந்த விருப்பத்துடன் தருமங்களைச் செய்வான். சந்தியாவந்தனம், ஆசாரம் முதலியவைகளை விடுதல், பொறாமை, கோட்சொல்லல், கருமம் முடியும்வரை சினேகிதனாகவும்பந்துவாகவும் இருத்தல், சிராத்தம்விடுதல், பிதாமாதாக்களை இகழ்தல், புத்திரத் துரோகம், மனையாள் துரோகம், மரணசௌச சனனசௌசங்களை விடுத்தல், சண்டாளர் முதலியோர் தீண்டினால் ஸ்நானஞ்செய்யாதுவிடுதல், சங்கு சக்கர சின்னமுடையாருடன் கலந்து விவாகஞ்செய்தல், நான்கு வருணத்தாரும் சங்கரசாதியாதல், அகங்காரத்தால் பிறர்க்கு துன்பஞ் செய்தல், தரும திரவியத்தைக் கவர்தல், அசற்பாத்திரருக்குத் தானங் கொடுத்தல், சற்பாத்திரருக்குக் கொடாதிருத்தல், குலப்பெண்கள் பொதுப் பெண்களைப்போல் அலங்கரித்துக்கொள்ளுதல், பசுக்களைப்பால்காரணமாகப் பரிபாலித்தல், மூடர் சாதுக்கள் விதவைகள் பாலர்களது பொருள்களை அபகரித்தல், ஸ்நானஞ் செய்யாதிருத்தல், அகாலத்தில் கிரியைகள்செய்தல், வேதாகம நிந்தனை, விப்பிர நிந்தனை, சிவனடியார் நிந்தனை, குருநிந்தனை செய்தல், பரமசிவனிடத்தில் பத்தியில்லாது கருப்பன் கண்ணகி பேச்சி முதலிய துர்த்தேவதைகளிடத்தில் பத்திசெய்தல், சிவார்ச்சனை பண்ணுகிறவர்களை நிந்தித்தல், சண்டாளரிடத்தில் உண்ணல், மாதர்கள் கணவனை நிந்தித்தல், கடவுளை மறத்தல் முதலிய கெடுதிகள் உண்டாம்.

ஆதிகற்பத்திலே கலியுகத்திலே நான்கு வேதங்களையும், இருபத்தெட்டு ஆகமங்களையும், ஆறங்கங்களையும், பதினெண்புராணங்களையும், சந்தேக விபரீதமறக் கற்றுணர்ந்தவனும் சிவார்ச்சனை செய்பவனும் விபூதி ருத்திராக்ஷந் தரித்தவனும் ஆகிய சுசிகரன் என்னும் ஒரு பிராமணன் இருந்தான். கலியின் கொடுமை அதிகரித்து எங்கும் பாவிகள் அதிகமிருப்பதைக் கண்டான். இக்கலிதோஷம் என்னையும்பற்றி நாசமடையச் செய்யும் என்று பயங்கரங்கொண்டு பரமசிவனைத் தியானித்தான். அவன் தீர்த்தயாத்திரை செய்துகொண்டு வருங்காலத்தில், தனக்குப் பின்னாகக் கலிபுருஷன் கருநிறத்தையுடையவனாய், கையில் வாட்படையைத் தாங்கிக் கொண்டு, பயங்கரமான உருவத்துடன் வருவதைக்கண்டு, சிவமூலமந்திரத்தைச் செபித்தான். கலிபுருஷன் மறைந்தான். இன்னுமவன் நம்மைத் தொடருவானோ என்றுநினைத்து, ஒருவிருக்ஷத்தினடியில் இருந்து திரும்பிப் பார்த்தான். நெடுந்தூரத்தில் கலிபுருடன் வருவதைக் கண்டான். கீழே விழுந்து மூர்ச்சையடைந்து தெளிந்தான். "முன் ஸ்ரீ பஞ்சாக்ஷர மந்திரத்தால் மறைந்தவன் இப்பொழுது காணப்படுகின்றான்; இன்னும் அப்பஞ்சாக்ஷரமந்திரத்தையே செபிப்பே"னென்று தியானத்துடன் செபித்தான். கலிபுருடன் மறைந்தான். சுசிகரன் திருவையாற்றை அடைந்து, காவேரியில் ஸ்நானஞ் செய்தான். ஆலயப்பிரவேசஞ்செய்து, சிவபெருமானை வலம்வந்து வணங்கித் தோத்திரம் பண்ணினான். பரமசிவன் பிரசன்னமானார். சுசிகரன் எழுந்து நின்று "சுவாமி! என்னைக் கலிபுருஷன் அணுகாதபடி காத்தருளவேண்டும்" என்றான். "சுசிகரனே! கலிபுருஷன் இனி உன்னை அணுகமாட்டான். நீ நம்மைத்தரிசித்துவணங்கி, இத்தலத்திலிருந்து முத்தியடைவாய்" என்று சிவபெருமான் அனுக்கிரகித்து மறைந்தருளினார். சுசிகரன் திருவையாற்றிலிருந்து தவஞ்செய்து முத்தியடைந்தான்.

உ

## ஒற்றுமை.

### (தனவணிகர்கள் கவனிப்பாராக.)

இச்சொல் உலகில்ஐக்கியத்தன்மையை விளக்கும்உயரியது. ஒற்றுமையின் தன்மையாவது வேற்றுமையின்றி யாவரையும் உண்மையோடு உள்ளன்புடன் நேசித்தலேயாம். இதனால் எவருடனும் பகைமையின்றி அமைதியாக வாழ ஏதுவுண்டு இது பற்றியே "ஒன்றுபட்டாலுண்டு வாழ்வே, ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே" என்ற பழமொழி பல்லவியாகப் பாடப் பெறுகிறது. ஒற்றுமைவளரவேண்டுமானால்முதலாவதுகுடும்பத்தில் தந்தை தாய் மனைவி மக்கள் சுற்றந்துணை ஆகியவர்களுடன் மன வேறுபாடின்றி ஒருமையாக வாழவேண்டும். அதன்மேல் படிப்படியாக ஊரவருடனும், தம்சமூகத்தவருடனும், பிறசமூகத்தவருடனும், தம்சமயத்தினருடனும், பிறசமயத்தினருடனும், தம்நாட்டவருடனும் பிறநாட்டவருடனும் ஒற்றுமை பாராட்ட வேண்டும். ஒற்றுமை வளர்தற்கு ஹேது இதுவே. இந்த ஒற்றுமை எல்லாச்சாதி சமயத்தாரிடமும் பொதுவாக இருக்க வேண்டும். இருந்தும் வந்தது.

தனவணிக சமூகத்தினர் தொன்றுதொட்டு சமூகத்தைத் தழுவி ஒற்றுமையை ஒரு சிறிதும் நழுவவிடாது பெருமையாகத் தங்கள் வாழ்க்கையை நடத்தி வந்தார்கள். "மூத்தோர் சொல் வார்த்தை யமிர்தம்" என, பெரியோர்கள் சொல்லுக்கு மரியாதை யிருந்தது. அதனால் எண்ணிக்கை யளவில் உள்ள இச்சமூகம் கட்டும்செட்டுமாகக் காரியங்களைநடத்தவும் "வைசியர்க்கழகு வளர் பொருளீட்டல்" "அஃமுமர்காசும் சிக்கெனத்தேடு" "திரைகடலோடியுந் திரவியந்தேடு" "ஊக்கமுடைமை ஆக்கத்திற்கழகு" "பொருடனைப் போற்றிவாழ்" என்ற வாக்கியங்களைச் சிலாக்கியமாகக் கொண்டு தெய்வத்துணைபற்றிப் பெரும் பொருளீட்டியும் ஈட்டிய பொருளைப்போற்றியும் அறம்பலபுரிந்தும் பெருமை பெறவுமாயின.

வரம்பு மீறாமல் பெரியோர் வகுத்த நெறிமுறையொழுகி வந்த இச்சமூக ஒற்றுமையானது, இவ்வுலகை வாழ்விக்கவந்ததாக ஆரவாரித் தெழுந்த சுயமரியாதை, காங்கிரஸ், அரிசன இயக்கம் என்னும் பொருத்தமற்ற கக்ஷிகள் வந்து புகுந்ததால் ஒரு சிறிது பாதிக்கபட்டிருக்கிறது. இம்மூன்று கட்சிகளும் ஒன்றற்கொன்று அண்ணன் தம்பிகளாக ஒற்றுமையுடையனவே. துள்ளிக்குதித்த சுயமரியாதை சொரூபந்தெரியாமல் தன்னைத்தோற்றுவித்த காங்கிரசுட் புகுந்து ஒடுங்கியது. காங்கிரஸ் தோன்றியகாலந் தொட்டு இதுவரை விளைவித்த பலன் கலகத்தைத் தவிர வேறெதுவுமில்லை யென்பதிற்றடையென்னை? அரிசனஇயக்கம் தோற்றுவதற்குக்காரணர்காங்கிரசின் தலைமையராகக்கொண்டாடப்படும் காந்தியாரேயாவர்.

காந்தியாரின் கொள்கைகள் முற்றும் உலகியலுக்கு மாறுபாடாகக் காணப்படுகின்றன. அவர் லட்சுமி நாராயணரென்பதற்கு மாறாகத் தரித்திர நாராயணனென்பதும் பஞ்சமர்களை அரிசனர் என்பதும் எம்முறையானும் பொருந்துமா? பொருள் இயைபுளதா? "உங்கள் தாய் தந்தையர் சொல்லைக் கேட்காதீர்கள்! விதவையை மணந்து கொள்ளுங்கள்" "கைவளையல்களைக் கழற்றித் தந்துவிடுங்கள்" என்பனவாதிய அவருபதேசங்கள் உறுதிபயப்பனவா? ஒற்றுமைக்குரியனவா? பசுங்கன்றைக் காப்பாற்றப் பாடுபடாமல் விஷஊசி யேற்றிப் பாதகம் புரியச் செய்ததையும் அவர்தம் தொண்டர்கள் பாராட்டினரென்றால் தொண்டர்தம் பெருமை சொல்லுதற்கெளியதோ? இத்தகு தொண்டர்களால் உலகம் போற்றும் உத்தமர் மகாத்மா எனக் கொண்டாடப்படுபவருக்கு திருக்கோயில்களிடத்தில் அசூயையுண்டாவதும், திருக்கோயில்களை வேசையர் விடுதிக்கு ஒப்பிடுவதும், புலையர்கள் புகுந்தாற்றான் திருக்கோயில்கள் புனிதமாகு மென்பதுமே பெருமை தருவனவென்றால் இவருக்கொப்பான மகாத்மாவை முன்னர்க் கண்டதுமில்லை பின்னர்க்காண்பதுமில்லை யென்றுதான் கூற வேண்டும். வேசையர் விடுதியும் வேசையர்க்கே ஆதிக்கமன்றி திருக்கோயில் துரோகியாகிய இவர்க்கு ஆதிக்கமாகாது.

சாதியெல்லாம் ஒன்று; சமயமெல்லாம் ஒன்று யாதொரு பேதமுமில்லை யென்பது பாரமார்த்திகமாகும். அது உலகியலுக்கு ஒவ்வாது அதை உலகியலில் புகுத்தினால் உலகம் நடைபெறாது என்றறியாமல் சாதிசமயாசாரவரம்புக்குமாறாக ஒருசாரார் தங்கள் உரிமைகளை உடைமைகளை விட்டுக்கொடுக்கவும் மற்றொருசாரார் அவைகளை யபகரித்துக்கொள்ளவும் வேண்டுமென்பது கலகத்துக்கான வழியேயன்றி ஒற்றுமைக்குற்ற வழியன்று.

இந்து முஸ்லீம் ஒற்றுமைப்பட வேண்டுமென்றால் இந்துக்களின் தேவாலயங்களுள் முஸ்லீம்களும் முஸ்லீம்களின் மசூதிகளுள் இந்துக்களும் புகுந்து ஒற்றுமைப்படுகிறதா? சாதிபேதமின்றி உடனுண்டு உடனுறைந்து மணம்புணர்ந்து ஒற்றுமைப்படுகிறதா? இல்லையே. ஒருவரையொருவர் துவேஷிக்காமல் மனமொன்றி வாழ்தல்தானே? அங்ஙனமின்றி முஸ்லீம்களின் மசூதிக்குள் இந்துக்களும் நுழையலாம்; நுழைந்தால்தான் மசூதிபுனிதமடையும்; இந்து முஸ்லீம் ஒற்றுமை ஏற்படுமென்று கூறத்தகுமோ? கூறின் அதனால்விளையும் பலன் அனர்த்தந்தானே? காந்தி அப்படிச்சொல்லுவாரா? சொல்லமாட்டார். சொன்னால் படும்பாடு இன்னதென்றறிவார். சாதிமதம் வேறென்பார் அச்சாதியும் மதமும் அநாதியல்ல; தீரவிசாரிக்கின் இந்துக்களிலிருந்துபிரிந்து உண்டானசாதிமதமென்பதே தெளிவாம்.



இந்துக்களுள் பேதமிருப்பானேன் எனில் இன்றல்ல நேற்றல்ல தொன்றுதொட்டே இருந்து வருகிறது; எவராலும் மாற்ற இயலாது. சாதி சமயாசாரங்கள் உள்ளது உள்ளபடியிருந்துவருவதால் ஒற்றுமைக் குறைவுண்டாகாது மாற்றப்புகுந்தால்தான் மாற்சரியம் உண்டாகும். சாதி சமயாசாரங்களில் பேதமின்றிச் சமரசமடையவேண்டுமென்கின்றவர்கள், வெள்ளையர், கருப்பர் என்றவித்தியாசமின்றி வெள்ளையர்களிடத்தும் துவேஷங்கொள்ளாமல் மிகச் சமரசமாயிருந்துவிடலாகாதா? அவர்களிடத்து வெறுப்புக்கொள்வானேன்? வித்தியாசம் பாராட்டுவானேன்? சாதி சமயாசாரங்களில் தலையிடக்கூடாதென்ற உறுதியைக் கேட்டுக்கொண்ட நம்முன்னோர்களையும் அவ்வுறுதியை உடன்பாடாகக் கொண்ட அரசினரையும் அவமதித்துப் பெறும்பேறுதானென்னையோ? இகபரலாபங்கட்கேதுவாகிய சாதி சமயாசாரங்களைக்கைவிட்டு ஆட்சி பெறுவதைப் பார்க்கிலும் சாதிசமயாசாரங்களைக் காப்பாற்றிக்கொள்வதே மேலெனக் கருதும்சநாதனிகளைத் துன்புறுத்துவதும் அவர்களின் சுதந்தர வுரிமைகளுக்குக் கேடுவிளைப்பதும், திருக்கோயிலிழிவு புரிவதும் ஒற்றுமையையுண்டுபண்ணவோ சுயஆட்சிபெறவோ உரியனவாகா. சுயாட்சி முயற்கொம்பாயிருக்கும்போதே இப்பாடுபடுத்துவோர் கிடைத்தால் எப்பாடு படுத்துவர் என்பது சொல்லவும் வேண்டுமா?

புலியும் பசுவும் ஒருதுறையில் தண்ணீர் குடிக்கும்படியான நேசப்பான்மையையுண்டுபண்ணலாம். புலியைப் பசுவாகவோ பசுவைப்புலியாகவோ மாற்றமுடியாது. புலியின் குகைக்குள் பசுவையும் பசுவின் கட்டுத்துறையுள் புலியையும் புகுத்தலாகா. ஆனையைப் பூனையாக்கி பூனையை ஆனையாக்கி கழுதையைக் குதிரையாக்கி குதிரையைக் கழுதையாக்கி ஒற்றுமைப்படுத்துவதென்றால் ஒற்றுமையும்பயனும் உண்டாகுமா? "ஒன்றுபட்டாலுண்டுவாழ்வே" என்ற பல்லவி பாடும் காங்கிரஸ்வாதிகள், காங்கிரசின் கொள்கையின்னது, ஜில்லா போர்டு என்றால் இன்னது, அதில் மெம்பராவார் செய்யும் செயல் இன்னது என்ற உணர்ச்சிதானும் சிறிதுமில்லாத பல சிறுவர்களை அறிவிலிகளைத் தொண்டராகச் சேர்த்துக்கொண்டு விருதாவாகக் கூட்டங்கள் கூடுவதும் "முதலாளித்வம் ஒழிக" "ஏகாதிபத்தியம் ஒழிக" "சுயராஜ்யம் வரப்போகிறது" "வந்தால் வரியேயிராது" "காங்கிரசுக்கே ஓட்டுப்போடுங்கள்" என ஆரவாரத்துடன் கூக்குரலிடச்செய்வதும், தங்கட்சியில்சேரா இசையாதாரைப் பயமுறுத்துவதும், தக்கபிரமுகர்களைப்பரிடாரதைக்குறைவாகத்தாக்கிப் பேசுவதும், பலகபவர்வகளைக் கூட்டிக் கலகம் விளைவிப்பதும்ஒற்றுமைக்குரிய வழிகளல்ல. ஒற்றுமைக்குப்பாடுபட வேண்டுமென்று பறைசாற்றிவந்த காங்கிரசுக்காரரே ஒரு கக்ஷிக்காரராக வந்து எங்களுக்கு ஓட்டுப்போடுங்களென்பது ஒற்றுமைக்குற்ற வழி

யாகுமா? ஆகாதே. திலோத்தமை என்னும் ஒருத்தியை சுந்தோபசுந்தர் என்னும் இருவர் விரும்பி தம்முள் ஒருவரையொருவர் தடிந்து மடிந்தவாறு ஒருஸ்தானத்தை இருவர் விரும்பிப் போராடி வீயாதிருப்பதே மேம்பாடாகும்.

பண்டிதநேரு என்பார் திக்குவிஜயஞ் செய்ததன் பயனாக பொதுவுடைமைக் கட்சிபாலி பகற்கொள்ளை யடிக்கலாமென்ற மனப்பான்மையுடன் காலிகள் பலர் காங்கிரசில் தொண்டரானார்கள். இத்தொண்டர்கள் இவ்வாண்டு நவம்பர் 23உ நடைபெற்ற இராமநாதபுரம் ஜில்லா போர்டு எலெக்ஷன்களில் நடந்துகொண்ட முறைத்தவறுகளும் செய்த கொடுமைகளும் அளப்பில. பெருங்கலகத்திற்குச் சித்தமாயிருந்தார்கள். ஆயினும் மற்றகட்சியார் பொறுமைமேற் கொண்டிருந்ததால் கலகம் நேர ஹேதுவில்லாதாயிற்று. காங்கிரசுக் கொள்கை கொள்ளையாக மாறிவிட்டதால் அடக்குமுறையை அரசினர் கையாண்டே தீரநேரும்.

எந்தக்கட்சியிலும் சேராமல் தற்சுதந்தரத்துடன் தங்கள் காரியத்திலே கண்ணுங் கருத்துமாயிருக்கும் தனவணிக நகரத்தாருள் ஒருசாரார், காங்கிரசு வாதிகளாக முனைந்து தங்கள் சமூகத் தலைவர்களை மதியாமல் கோயிலூரில் நவம்பர் 14உ கூட்டங்கூடியும் தங்கள் மனம்போனவாறு ஏதேதோ தீர்மானங்களை, சாதிசமயாசாரங்களின் அடையாளமாகிய பிள்ளையார் சுழிகூடப் போடாமல் வெளியிட்டுமிருக்கிறார்கள்.

ஒருசமூகவொற்றுமையே குலையுமானால் எல்லாச்சமூகமும் எப்படி ஒற்றுமையடைய முடியும்? ஒருசாரார் வெளியிடுந் தீர்மானத்தை எல்லோரும் எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்? பிளவுபடத்தானே கூடும். பலகயவர்கள்சேர்ந்து இச்சமூகத்தைப்பிளவுபடுத்திக்கஷ்டநஷ்டங்களுக்குள்ளாக்குவதற்கு நம்மவர்கள் இடங்கொடுக்கலாமா? தேச விடுதலைக்குப் பாடுபடுவதென்றால் எவ்வளவு போராற்றல்பெறவேண்டும். போராற்றலுக்குச்சாதனம் மனவுறுதியும் அமைதியுமன்றோ? மன அமைதியுற்றால் சமூகவொற்றுமையும்தேசவொற்றுமையும் உண்டாகுமே. தேசவொற்றுமையை நாடுவோர் சமூக ஒற்றுமைக்குப் பங்கம் செய்யலாமா? செய்யப்படாது. ஆகவே சமூகத்தினர் யாவரும் மனம் வேற்றுமையின்றி ஒருமைப்பாடுடன் கூட்டங்கூடியும் கட்சிப்பிரதிகட்சிகளைச் சமூக விஷயத்தில் நுழையவிடாமல் சமூக நலன்களை நாடி சமூகக் கட்டுப்பாடுடன் சமூக ஒற்றுமையை நிலைநாட்டியுங்கொள்வதே எல்லா நன்மைக்கும் ஏற்றதாகும். பழமையான பெருமைகளை நழுவவிடாமல் நம்மரபின் சிறப்பை நிலைநிறுத்திக்கொள்ள நங்குலதெய்வமாகிய மரகதவிநாயகர் மலரடி போற்றித்திருவருள்பெறுவோம்.

உ

## தமிழ்க்கணக்கில்தேறும் தனவணிக மாணவர்கட்குச் சன்மானம்.

இக்காலத்தில் ஆங்கிலக் கல்விபயிலும் தனவணிகமாணவர்கள் முற்காலமுறைப்படி தமிழ்க்கணக்கு வட்டிச்சிட்டையாதியவைகளை அகத்தியமாகக் கையாளவேண்டும். அவை செட்டியார்களின் கொண்டுவிலை கொடுக்கல் வாங்கல்களுக்கு இன்றியமையாதன. பழமையான இம்முறையை அலட்சியம்செய்யாதிருப்பதே நன்மையாகும். வெகுசுலபமாகக்கணக்குப்பார்க்கும் நம்புராதனமுறையை ஆங்கிலக் கல்லூரிகளில் பயிற்றும்படி திட்டம் செய்யவேண்டிய தவசியமாயிருக்கிறது எனக் கருதி கனம் செட்டிநாட்டு ராஜா, சர், அண்ணாமலைச் செட்டியாரவர்கள் செட்டிமார் நாட்டின் பகுதிகளில் மானாமதுரை, தேவகோட்டை, காரைக்குடி, பள்ளத்தூர், புதுக்கோட்டை சமஸ்தானத்தில் இராமச்சந்திரபுரம், ரெங்கோனைச் சேர்ந்த கம்பை ஆகிய ஊர்களிலுள்ள ஆறுகல்லூரிகளிலும் கல்வி கற்றுவரும் செட்டியார் மாணவர்களுக்கு, செட்டியார்களின் முறைப்படி வட்டிச்சிட்டை கணக்கு முதலியவைகளைக் கற்பிக்க கல்லூரி யொன்றுக்கு ரூபா இரண்டாயிரம் வீதம் பன்னீராயிர ரூபா நன்கொடையுதவியுள்ளார்கள். இதொகையை மூலதனமாக வைத்துக்கொண்டு அதன் வருவாயிலிருந்து ஒவ்வொரு கல்லூரியிலும் தமிழ்க்கணக்கு வட்டிச் சிட்டையாதியவைகள் பார்ப்பதில் முதற்றரமாகத்தேறும் தனவணிக மாணவர் இருவர்க்கு இரு சன்மானம் வழங்கத் திட்டஞ் செய்துள்ளார்கள்.

கணக்கிலணுவும் பிசகாது மனனமாகவே பார்க்கும் சக்தி வாய்ந்த செட்டியார்கள் கணக்கு வைத்திருக்கும் முறைகளையும் கணக்குப் பார்க்கும் திறமையையும் உள்நாட்டவர்களிலும் புறநாட்டவர்களிலும் பல அறிவாளிகளும் பிரபல பாங்கர்களும் உயர் தரநீதிபதிகளும் பாராட்டியுள்ளார்கள். சித்திரகுப்தரும் ''எண்ணுமெழுத்தும் கண்ணெனத் தகும்'' எனக்கொண்ட வைசியர் மரபினரே என்றால் கணக்குப் பார்ப்பதில் இவர்கட்கு இவர்களே நிகராதல் வியப்பாமோ? கணக்குக் காரியங்களில் அட்டாவதானிகளாக மிகத் தேர்ந்த செட்டியார்களுள் சிறந்த சதாவதானியாக விளங்கும் திருவாளர், ராசா. சர் அண்ணாமலைச் செட்டியாரவர்கள் தங்கள் வகையாரடைந்த நன்மைக்கெல்லாம் சாதகமாயிருந்த கணக்குமுறை தளராது வளரச் சன்மானமளிக்க முன் வந்தது அவர்களின் புராதனக் கொள்கையையும் பெருந்தன்மையையும் கணக்குக் காரியங்களில் அவர்களுக்குள்ள அழுத்தமான மனப்பான்மையையும் விளக்குகின்றது. அவர்களுதவிய பன்னீராயிர ரூபாகளும் பன்னிரு கோடி சூரியர்கள் பகலை விளக்குதல்போன்று பலமாணவர்கள் உலகில் விளக்கமுறவும், அவர்களின் புகழ் என்றும் நின்று நிலவ அவர்களாற்றும் அறங்கள் பலவும் வளர்ந்தோங்கவும் பரமருருநாதர் கருணை பாலிப்பாராக.

# மதிப்புரை மஞ்சரி.

சைவப்பிரகாசிகை:— இது அச்சுவேலி சிவஸ்ரீ ச. குமாரசாமிக் குருக்கள் அவர்கள் எழுதிய நான்காம் புத்தகம் இதன்கண் தெய்வ முகூர்த்தங்கள், தெய்வ பக்தர்கள், தெய்வதத்துவங்கள், திருத்தலங்கள், சிவவழிபாடு செய்தவர்கள், பெரியார்கள், நீதி மார்க்கங்கள், ஆலயதரிசனம் ஆகியவைகளின் 32 வரலாறுகளும் இனியவை நாற்பது என்னும் நூலிலிருந்து பத்துச் செய்யுட்கள் உரையுடனும் காணப்பெறுகின்றன. சைவ நன்மாணவர்களுக்கு சைவப் பற்றினையும் சமயஞானத்தையும் வளர்க்குந் தகுதிவாய்ந்தது. சைவபாடசாலைகளுக்கு மிக உபயோகமானது. இதிலிருந்து மாதிரிக்காக "ஆலயதரிசனம்" "கலியின் சுபாவமும் அதைநீக்கும் விதமும்" என்னும் இரு விஷயங்களை நம் சிவநேசனில் அனுவதித்திருக்கிறோம். இப்புத்தகம் யாழ்ப்பாணம், அச்சுவேலி P. O. உயர்திரு, ச. கு. வைத்தீசுவர சர்மா அவர்களிடமிருந்து பெறலாம். விலை சதம் 30.

பழநியந்தாதி:— தண்டபாணி திருவநுபூதி வெண்பா என்னும் இஃது அரண்மனை சிறுவயல், ரா. கருங்கற்பன் என்ற மகாதேவ அறிவானந்தனவர்களால் ஆக்கி கொங்கணாபுரம்மிட்டா ஜமீன்தார் N. செங்கோட்டு வேலக்கவுண்டரவர்களின் பொருளுதவியால் வெளியிட்டது. விலை அணா 2. இதன்மூலம் வருபொருள் செங்கோட்டு அர்த்தநாரீசுவரர் திருக்கோயில் திருவிளக்குக்கு உபயோகமாகும்.

கிராமணிகுலம்:— மலர் க. இதழ் சு. வரப்பெற்றோம். குலநலம் நாடி மாதம் இருமுறை சென்னையிலிருந்து வெளிவருவது. திருவாளர், த. சே. உமாபதி கிராமணி B. A. L. T. அவர்கள் இதன் ஆசிரியராவர். டிம்மி க-க்கு ச பக்கம் பன்னிரண்டில் ஆஸ்திகத் தன்மையுடன் அரிய கட்டுரைகள் தாங்கி வரும் இப்புதினத்தாளின் ஆண்டுவரி ரூபா ஒன்றேகால். தனிப்பிரதி அரையணா. குலாபிமானிகளும் ஆத்திகமக்களனைவரும் ஆதரிக்கத் தகுந்தது. 5, வரதராஜப்பெருமாள் கோயில் தெரு, தண்டையார்பேட்டை சென்னை கிராமணிகுலம் ஆசிரியருக்கு எழுதிப்பெறலாம்.

ராஜலக்ஷ்மி அல்லது மனிதனின் மறுமணம்:— இது தேவிகோட்டையிலிருக்கும் திருவையாறு T. R. ராஜகோபாலையரவர்கள் எழுதி அச்சியற்றி இலவசமாக வெளியிட்டது. வசனநூல் எழுதுந்திறன் நாளுக்கு நாள் வளர்ச்சியுறுமெனத் தோற்றுகிறது. வியாபார விளம்பரங்களின் உதவியால் இம்மாதிரி இலவச வெளியீடுகள் செய்வதே நோக்கம்.

அருட்டா விளக்கம்:— இஃது வடலூர் ஸ்ரீலஸ்ரீ இராமலிங்க சுவாமிகளின் அருட்பாவின் பெருமைகளை சுவாமிசுத்தானந்த பாரதியாரவர்களால் எழுதி புதுக்கோட்டை இயற்கைஇல்லத்தாரால் அச்சியற்றி வெளியிடப்பெற்றது.

மேலே கண்ட வெளியீடுகளை நம் பார்வைக்குய்த்த நல்லன்பர்களுக்கு நன்றி பாராட்டுகிறோம்.



# சைவம் நாட்டிய தமிழ்த்தாய்.

திரு, ஐயாறு சுவாமிகள்.)

(௧௦-ஆம் ஆண்டு அ-ஆம் பக்கத்தொடர்ச்சி)

நமது வாகீசப் பெருமான் சமணர்களது கொடுமையும் நாளும் கோளும் இப்போது நன்றில்லையென்று கூற திருஞானசம்பந்தப் பெருமான் வாக்கின் மன்னரை நோக்கி,

"வேயுறு தோளிபங்கன் விடமுண்டகண்டன் மிகநல்லவீணைதடவி
மாசறு திங்கள்கங்கை முடிமேலணிந்தென் னுளமே புகுந்தவதனால்
ஞாயிறுதிங்கள்செவ்வாய் புதன்வியாழன்வெள்ளி சனிபாம்பிரண்டு
ஆசறு நல்லநல்ல அவைநல்லநல்ல அடியாரவர்க்குமிகவே" [முடனே

என்னும் கோளறு திருப்பதிகத்தால் அடியார்களுக்கு எந்நாளும் நன்னாளே எல்லாம் நல்லவையே என்பதைத் திருவாய் மலர்ந்தருளினர். அருள்மொழி கேட்ட திருநாவுக்கரசர் உடன்பட்டுத் தாமு முடனெழ, நமது ஞானபோனகர் மாமறைக்காடரை வணங்கி விடைபெற்று வாக்கின் மன்னரை யவணிருத்தி அவர் பாலும் விடைபெற்று ஐந்தெழுத்தோதி முத்துச் சிவிகையிலாரோகணித்தருளினர்.

அடியவர்கள் ஹரஹர வென்றார்ப்ப திருவகத்தியான்பள்ளி, திருவுசாத்தானம், திருக்கொடுங்குன்றம் முதலிய விடைப்பட்ட தலங்களில் திருக்கோயில் கொண்ட சிவப்பெருமானை வணங்கித் திருப் பதிகங்கள் பாடி மதுரைமா நகர்நோக்கி நமது சுவாமிகள் வரவே, ஆனைமலை முதலிய விடங்களில் வசிக்கும் அமணர்கள் பலதுன்னிமித்தங்கள் கண்டு துயருற்றார்கள். அவர்கள் அங்ஙனமாக, நமது மங்கையர்க்கரசியாரு மமைச்சனாரும் நன்னிமித்தம் பல *கண்டு அகமிக மகிழ்ந்து, உலகமுய்ய ஞானப்பாலுண்ட நமது பாலறுவாயர் வந்தணைந்தருளும் திறத்தினைக் கேள்வியுற்று, தம்பாலிதனை விளம்பினோர்க்கு வேண்டுவ கொடுத்து, களிமிகுதியால் தம்மையு மறந்தார்கள். இந்நிலையில் மங்கையர்க்கரசியார், தம்மை வணங்கிய குலச்சிறையாரை நோக்கி, நங்கடம்பிரானாய ஞானபோனகரை எதிர்கொள்கவெனக்கட்டளையிட்டார்.

நமது குலச்சிறை நாயனார் திருஞான சம்பந்தப் பெருந்தகையாரை யெதிர் கொளச் சென்றார். பங்கயமலராளனைய பாண்டிமாதேவியார், தம் கணவனும் கூன்பாண்டியனை நோக்கி, திருவாலவாயமர்ந்த சிவபெருமானை வணங்கவேண்டுமென்று கூறி, தம்

பரிசனம் சூழத் திருக்கோயில் சென்று சோமசுந்தரக்கடவுளை வணங்கி, பாலறுவாயரது நல்வரவினை யெதிர் பார்த்து நின்றார். மறை முழங்கொலிவானளாவ, துந்துபி முதலாந் தூரிய முழங்க, செந்தமிழ் மாருதஞ் சென்றெதிர்கொண்டு சேவிப்ப, அமணெனும் பாவவிருளிரிந்தோட, பரசமய கோளரி வந்தார். பாலறுவாயர் வந்தார் என்று பொற் சின்னம் ஒலிக்க, அடியார்கூட்டம் தற்சூழ, வெண்குடை நிழற்ற நமது சுவாமிகள் முத்தச்சிவிகையிலாரோகணித்து வரும்போதுண்டாய பேரொலி அமைச்சனாரது செவியிலமுதெனப் புக்கது. அப்போதே வரும் வழி நோக்கி வணங்கி, அளப்பருங்களிப்பினரானார். அஞ்சலித்த கரங்கள் சிரமேலேற, அதிவிரைவாக வந்து சுவாமிகள் சிறிது தூரத்தே வரும்போதே அமைச்சனார் நிலமிசைவீழ்ந்து வணங்கினார். வணங்கிய குலச்சிறையாரைத்திருத்தொண்டர்பலரும்சென்றுவணங்கி, அமைச்சனுரெழாது கண்டு, மலர்மிசையயனும், வண்டுளாயலங்கல்மாலும் வழிபடும் புகலிவைதிகசேகரர்மலரடியிணைகளை வணங்கி, தென்னவனமைச்சராங்குலச்சிறையாரீண்டணைந்தா ரென்றுவிண்ணப்பஞ்செய்தார்கள். சிரபுரச்செல்வர்திருத்தொண்டருரைகேட்டுத்திருமுக மலர்ந்து, முத்தச் சிவிகையினின்றிறங்கி விரைவாக அமைச்சர்பாற் சென்று கர கமலங்களாலவரையெடுப்ப, அவரும் கைதொழுது நிற்க, செம்பியர் பெருமான் திருமகளார்க்கும் திருந்திய சிந்தை யீருமக்கும் நமது சிவபெருமானது திருவருள் பெருத நன்மை சிறப்புடைத் தென்றருளினார். மந்திரியாரும் மண்மிசை விழுந் தடிவணங்கித் தமது தவப் பயனனையாரை நோக்கி, தாங்களெழுந்தருளிய பெரும் பேற்றால் என்றும் திருவருளுடையோம். நன்றியிலமணெறி மேவிய நாடும், நற்றமிழ் வேந்தனு முய்ந்து வெண்டிரு நீற்றொளியின் விளங்கும் மேன்மையும் படைத்தனம். மங்கையர்க்கரசியாரும் அடிகணல் வரவுகேட்டு வாழ்வு எழுந்தருளிய தென்று மனமகிழ்ந்து, எதிர் சென்று இணையடி பணியக்கட்டளையிட்டருளினார். என்று விண்ணப்பித்து மீண்டும் அடிபணிந்தார். நமது சுவாமிகள் அருள் பெருகு மீரன்மொழியாற் றகுவனவருளினார்கள். இவ்விதம் பேசிக்கொண்டுவரும்போது, மணிமதில்சூழ் மதுரை தோன்றலும் அடிகளார் ஆலவாய் எம்மருங்கினதென அமைச்சரை வினவினார்.

(வரும்.)

186956

# செய்தித்திரட்டு.

**குன்றக்குடி:—** ஐப்பசி உகவ தொடங்கி கார்த்திகை சவ ஸ்கந்த சஷ்டித் திருவிழாவும், ௩வ திருக்கல்யாணமும், கஉவ திருக்கார்த்திகை தீப வைபவமும் வழக்கம்போல சிறப்பாக நடைபெற்றன. திரளான அன்பர்கள் வந்து தெரிசித் தின்புற்றனர்.

**திருவாளர், வ. உ. சிதம்பரம் பிள்ளை யவர்கள்:—** இவர்களே தென்னாட்டில் தேசபக்தசிகாமணியாய்த் திகழ்ந்தார்கள். 1900ஆம் ஆண்டு முதல் இவர்கள் செய்த தேசீயக் கிளர்ச்சி மிகப்பிரபலமுடையது. இவர்களுக்கு மிகுந்த செல்வாக்கிருந்தது. இந்நாட்டினர் சுதேசவுடைகளையே விரும்பி அணியச் செய்தார்கள். சுதேசி ஸ்டீம் நாவிகேஷன் கம்பேனியை நிறுவி ஐரோப்பியப் புகைக் கப்பல்களுக்குப்போட்டியாக சென்னைக்கும் ரெங்கோனுக்குங்கப்பலோடச்செய்தார்கள். இவர்களின் மனவுறுதியும் நாவன்மையும் எல்லோரையும் வசப்படுத்தியது. துரைத்தனத்தார் இவரைச்சமாதானத்திற்கு அழைத்தும் இவர் இணங்காதினால் 1907-ம்ஆண்டில்ராஜத்துரோகக் குற்றச்சாட்டுக்கு ஆளாகிஆயுள்வரை தண்டனையடைந்து, ஆறுவருடம் சிறையிருந்து விடுதலை செய்யப்பட்டு வறுமை காரணமாக வக்கீல் தொழிலை நடத்திஜீவியம்செய்துவந்தார். தமிழில் நல்லநூலுணர்ச்சியுள்ளவர், பல நூல்களியற்றியுள்ளார். இவரைப்போல தேசீயத்தலைவர்களைக் காண்பது அரிதினும் அரிதே. இத்தகு தலைவரை ஆதரிக்கமாட்டாத இந்நாட்டினரின் அறியாமைக்கு மிகவும் வருந்தற்பாலதே. தேசநேசராகிய இப்பெரியார் தூத்துக்குடியில் தமது இல்லத்தில் நவம்பர் 18வ இரவு பரலோக பிராப்தியடைந்தார். 19வ அமைதியாக ஊர்வலஞ்செய்து தகனக் கிரியை நடைபெற்றது. இவரது பிரிவுக்கு ஊரவர் அனைவரும் வருந்தி 19வயன்று பிறிதொருகாரியமும் பாராத விரதம் பூண்டனர். இச்சுதந்தர சிங்கத்திற்கு ஆண்டு அறுபத்தைந்து. இவரது மனைவியாரும், குமாரர்கள் மூவரும், குமாரிகள் நால்வரும் இருக்கின்றார்கள். வீரப்பிரதாபராய் விளங்கிய சிதம்பரம் பிள்ளையவர்களின் பிரிவு தென்னாட்டினர்க்கு மிகவும் பரிபவத்தை யுண்டுபண்ணியிருக்கிறது. அவர்களின் ஆன்மா திருவடி நீழலிற் கலந்து இன்புற இறைவனை வேண்டுவோமாக.

**மாஜி கவர்னர்:—** லாமெம்பராகிய சர், K. V. ரெட்டி நாயுடு அவர்கள் நவம்பர் 6வ முற்பகல் ஒக்கூர் எலக்டிரிக் கார்ப்பொரேஷனையும், பிற்பகல் தேவகோட்டைகார்ப்பொரேஷனையும்பார்வையிட்டனர். அவர்கட்குத் தேவகோட்டை வக்கீல் சங்கத்தார் ஒரு வரவேற்பு வழங்கினர்.

**திருச்சிக்கல்:—** ஸ்ரீ சிங்கார வேலாயுத சுவாமிக்கு ஸ்கந்த சஷ்டி மஹோற்சவம் ஐப்பசி உஅவ அனுக்ஞை, விக்னேஸ்வர பூஜையாதிய செய்து உகவ தொடங்கி கார்த்திகை சவ சூரசம்மாரமும், ௫வ தெய்வயானை யம்மையார் திருமணமும், கூவ வள்ளிநாயகியார் திருமணமும், எவ விடையாற்றியும், அவ சர்வப்பிராயச்சித்தபிஷேகமும், உத்ஸவ ஆரம்பமுதல் ஆரியவேத தமிழ்வேத பாராயணங்களும், திருப்புகழ்ப் பாராயணமும், சங்கீதக்கச்சேரிகளும், கதாகால க்ஷேபங்களும் வழக்கம்போல மிக விமரிசையாக தர்மகர்த்தர், திருவாளர், கரு. முத்து. அழ. அருணாசலச் செட்டியாரவர்களால் நடத்தப்பெற்று நன்கு நிறைவேறியது.

# சிவநேசன்.

நகரக்கூட்டம்:— சென்னையிலுள்ள நாட்டுக்கோட்டை நகரத்தார் அசோஷியேஷன் சார்பாக அபேதவாதக் கொள்கையை எதிர்க்கவும், புதிய அரசியல் திட்டத்தில் நமது பாதுகாப்புக்கு வேண்டிய சாதனங்களைத் தேடிக்கொள்ளவும் பிரிட்டிஷ் இந்தியாவிலும் புதுக்கோட்டை சமஸ்தானத்திலுமுள்ள நாட்டுக்கோட்டை நகரத்தாரனைவரும், நமது சமூகத்தாரில் காங்கிரஸ்கக்ஷியில் சேர்ந்திருக்கிறவர்களும் ஐப்பசி உகூஉ காலை எட்டு மணிக்குக்கோயிலூரில்வந்துகூட வேண்டுமென்பதாக ஐப்பசி உசஉ விண்ணப்பம் செய்து அப்பால் ஜில்லா போர்டு எலெக்ஷன் போட்டியின் காரணத்தால் எலெக்ஷன் முடிந்தபிறகுதான் வர வசதியாய்க்குமெனப் பலர் கருதியபடி எலக்ஷன் தேதியாகிய கார்த்திகை அஉக்குமேல் கூட்டம் கூடும் தேதி நிச்சயப்படுத்தித் தெரிவிப்பதென முடிவு செய்திருப்பதாக ஐப்பசி உகூஉ விண்ணப்பம் செய்யப்பெற்றது. இங்ஙனமிருக்க அதற்குமாறாக நகரத்தார் கூட்டம் தேதிமாற்றமில்லை என்று பிள்ளையார் சுழி, வருடம், மாதம், தேதி, ஊர், பேர் எதுவுமின்றி நகரத்தார் என்ற ஒப்பத்துடன் ஒரு நுண்டுத்தாளும், காங்கிரசுவாதிகள் ஐம்பதின்மருக்குமேல் கையெழுத்திட்ட ஒரு தாளும் வெளியிட்டு நகரத்தார்களில் காங்கிரசில் சேர்ந்தவர்கள் மாத்திரம் கூடிப் பத்துத் தீர்மானங்களை அச்சிட்டு வெளியிட்டிருக்கிறார்கள் எனத் தெரிகிறது. நகரக்கூட்டமானது நகரத்தாரனைவரும் ஒருமித்துச் செய்வதுதான் நன்மைக்கு ஏதுவாகவும் பெருமையாகவுமிருக்கும். தனிமுறையிலுள்ள விரோதங்களைப் பொதுவில் புகுத்தி மனம்போனவாறு தீர்மானங்களை வெளியிடுவது சமூக ஒற்றுமைக்கும் நன்மைக்கும் பங்கம் விளைவிப்பதாக, பிறசமூகத்தவர் நம்மைப் பரிகசிக்க இடங்கொடுப்பதாக விருக்கின்றமையால் குரோதமின்றி எவரும் ஒருமித்துக் கூடி காரண காரியங்களை விதானித்துத் தீர்மானங்களை நிறைவேற்றி நடைபெறச் செய்வதே நேர்மையும் பழமையான பெருமைகளைப் பாது காக்கும் சீர்மையுமாகும்.

தஞ்சை ஜில்லா போர்டு:— அங்கத்தினர் தேர்தலில் அறந்தாங்கித் தாலுகா வெள்ளூர் சரகத்திற்கு பெருநாவலூர் ஜமீன் உரிமையாளராகிய புதுவயல் திருவாளர், எ. மு. முத்தையசெட்டியார் தேர்தலானார்கள்.


"சிவநேசன்" ஆண்டுத்தொகை விவரம்.

| | | | |
|---|---|---|---|
| உள்நாட்டிற்கு | ரூ 2--4--0 | அதற்கு மூலதனம் | ரூ 30--0--0 |
| அயல்நாட்டிற்கு | ரூ 3--0--0 | அதற்கு மூலதனம் | ரூ 40..0--0 |

தனிப்பிரதி அணா 0—3--0

விளம்பரவிகிதம்.

வியாபார விளம்பரம் பக்கம் 1-க்கு ரூ 4—0—0

நீதிமன்ற விளம்பரம் பக்கம் 1-க்கு ரூ 8—0—0

பலவான்குடி 'சிவநேசன்' அச்சியந்திரசாலையில், பத்திராதிபர் ராம. கு. ராம. [illegible] செட்டியாரால் அச்சியற்றிவெளியிடப்பெற்றது.